Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 | செய்தி: 021 493 0000 · விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :251 ஆடி 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை 07 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## மஹிந்தவுக்கு மோடி வாழ்த்து

கொழும்பு, ஓக. 7

இதுவரை வெளியான பொதுத் தேர்தல் முடிவுகளின்படி பொது ஜன பெரமுன முன்னிலை வகிக்கும் நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்குப் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். 15

# பெரமுன அசுர வெற்றி

### இருப்பினும் மூன்றிலிரண்டு கிட்டவில்லை

கொழும்பு, ஓகஸ்ட் 7

மஹிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொது ஜன பெரமுன 128 ஆசனங்களைக் கைப்பற்றி ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் பெரும் வெற்றியீட்டியுள்ளது. மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்குரிய 150 ஆசனங்களை அந்த அணியால் கைப்பற்ற முடியவில்லை. இருப்பினும் 19 மாவட்டங்களில் அறுதிப் பெரும்பான்மையுடன் அந்தக் கட்சி வெற்றியீட்டியுள்ளது. 15

# வடக்கு கிழக்கில் கூட்டமைப்புக்கு அடி

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இந்தக் கட்சி கடந்த 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் 16 ஆசனங்களைப் பெற்றிருந்த நிலையில் இம்முறை 9 ஆசனங்களையே கைப்பற்றியுள்ளது. 15

## புலனாய்வு பணியில் 2,500 பொலிஸார்!

கொழும்பு, ஓக. 7

தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் நாட்டின் அமைதியை நிலைநாட்டுவதற்காக 2 ஆயிரத்து 500 பொலிஸார் புலனாய்வுச் செயற்பாடுகளில் ஈடுப 15

### சித்தர், சுமந்திரன், சசிகலா

## நள்ளிரவு தாண்டியும் ஏணியும் பாம்பும்!

யாழ்ப்பாணம், ஓக.7

விருப்பு வாக்கு எண்ணிக்கைகள் அடிக்கடி ஏறி இறங்கியதால் ஆதரவாளர்களிடையே பெரும் குழப்ப நிலைமை தோன்றி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி களேபரமானது. கடந்த புதன்கிழமை பொதுத் தேர்தல் வாக்களிப்பு நடைபெற்ற 15

## திருமலையில் தமிழரசு கட்சிக்கு ஓர் ஆசனமே

திருகோணமலை, ஓக.7

நாடாளுமன்றத் தேர்தல் உத்தியோகபூர்வ முடிவுகளின் பிரகாரம் திருகோணமலை மாவட்டத்தில் 39 ஆயிரத்து 570 வாக்குகளைப் பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) ஓர் ஆசனத்தை தக்கவைத்துள்ளது. 86 ஆயிரத்து 394 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி 2 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. அதே 15


| கட்சிகள் | ஆசனங்கள் |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன | 128 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 47 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 9 |
| ஈ.பி.டி.பி | 2 |
| தேசிய மக்கள் சக்தி | 2 |

## மத்திய கல்லூரியில் பெரும் களேபரம்

### கண்ணீரோடு வெளியேறினார் சசிகலா மாவையின் மகன் மீதும் தாக்குதல்



15



## வடக்கில் வெற்றிபெற்ற வேட்பாளர்கள் இவர்களே

யாழ்ப்பாணம், ஓக. 7

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் தேசியப் பட்டியல் தவிர்ந்து வன்னித் தேர்தல் தொகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்று ஆசனங்களைப் பெற்றுள்ளது. அதன்படி சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வினோநோக 15

## ரணிலுக்கு முட்டை !

### ரவியும் 'அவுட்'

கொழும்பு, ஓக. 7

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது 42 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் முதல்தடவையாக நாடாளுமன்றுக்குச் செல்லும் வாய்ப்பை இழந்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசி 15

## கால் பதித்தது சுதந்திரக்கட்சி

யாழ்ப்பாணம், ஓக.7

வடக்கில் பல தசாப்தங்களுக்குப் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி முதன்முறையாக நாடாளுமன்றப் பிர 15

## சிறைக்குள் இருந்தவாறு வென்றார் பிள்ளையான்

மட்டக்களப்பு, ஓக. 7

இலங்கை அரசியல் வரலாற் 15

## சைக்கிள் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஓக.7

இம்முறை முதன்முறையாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஓர் ஆசனம் கிடைத்துள்ளது. கடந்த இரு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் படுதோல்வியடைந்த முன்னணி கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெற்றிருந்தது.

இந்தநிலையில், இம் 15

## கூட்டமைப்புக்கு 9 ஆசனங்கள் தேசிய ரீதியில் மூன்றாமிடம்

### ஐ.தே.கவுக்கு ஓர் ஆசனமுமில்லை

யாழ்ப்பாணம், ஓக.7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 9 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. தேசிய ரீதியில் ஆசனங்களைக் 15



# நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் - 2020

## யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

### ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி - | 4,412 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்- | 1,376 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி- | 430 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 212 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 234 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி- | 6,369 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி- | 1,077 |
| சுயேச்சைக் குழு 5 - | 67 |
| சுயேச்சைக் குழு 8 - | 35 |

2020
செல்லுபடியானவை 15,311
நிராகரிக்கப்பட்டவை 1,632
வாக்களிப்பு 16,943
பதிவு செய்த வாக்காளர்கள் 22,811

### யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி - | 7,634 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்- | 4,642 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி- | 1,312 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 288 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 110 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி- | 5,545 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி- | 1,469 |
| சுயேச்சைக் குழு 5 - | 91 |
| சுயேச்சைக் குழு 8 - | 107 |

2020
செல்லுபடியானவை 23,136
நிராகரிக்கப்பட்டவை 2,029
வாக்களிப்பு 25,165
பதிவு செய்த வாக்காளர்கள் 33,886

### நல்லூர் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி - | 8,423 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்- | 8,386 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி- | 3,361 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 625 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 845 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி- | 3,988 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி- | 2,921 |
| சுயேச்சைக் குழு 5 - | 220 |
| சுயேச்சைக் குழு 8 - | 818 |

2020
செல்லுபடியானவை 30, 934
நிராகரிக்கப்பட்டவை 2,512
வாக்களிப்பு 33, 446
பதிவு செய்த வாக்காளர்கள் 47, 478

### வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி - | 9,024 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்- | 5,610 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி- | 2,463 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 1,316 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 1,110 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி- | 4,076 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி- | 4,556 |
| சுயேச்சைக் குழு 5 - | 131 |
| சுயேச்சைக் குழு 8 - | 104 |

2020
செல்லுபடியானவை 30,888
நிராகரிக்கப்பட்டவை 3,308
வாக்களிப்பு 34,196
பதிவு செய்த வாக்காளர்கள் 48,611

### கோப்பாய் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி - | 9,365 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்- | 5,672 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி- | 3,549 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 337 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 1,047 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி- | 4,353 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி- | 7,188 |
| சுயேச்சைக் குழு 5 - | 123 |
| சுயேச்சைக் குழு 8 - | 306 |

2020
செல்லுபடியானவை 35,179
நிராகரிக்கப்பட்டவை 3,770
வாக்களிப்பு 38,949
பதிவு செய்த வாக்காளர்கள் 58,917

### சாவகச்சேரி தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி - | 8,931 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்- | 4,772 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி- | 5,847 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 453 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 873 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி- | 3,331 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி- | 5,277 |
| சுயேச்சைக் குழு 5 - | 436 |
| சுயேச்சைக் குழு 8 - | 120 |

2020
செல்லுபடியானவை 31,640
நிராகரிக்கப்பட்டவை 3, 345
வாக்களிப்பு 34,985
பதிவு செய்த வாக்காளர்கள் 52,713

### காங்கேசன்துறை தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி - | 6,849 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்- | 4,645 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி- | 2,114 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 383 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 1,828 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி- | 4,185 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி- | 5,560 |
| சுயேச்சைக் குழு 5 - | 105 |
| சுயேச்சைக் குழு 8 - | 132 |

2020
செல்லுபடியானவை 27,232
நிராகரிக்கப்பட்டவை 2,674
வாக்களிப்பு 29,906
பதிவு செய்த வாக்காளர்கள் 61,727

### உடுப்பிட்டி தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி - | 3,868 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்- | 3,292 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி- | 4,457 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 206 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 1,315 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி- | 1,572 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி- | 6,214 |
| சுயேச்சைக் குழு 5 - | 179 |
| சுயேச்சைக் குழு 8 - | 69 |

2020
செல்லுபடியானவை 22,935
நிராகரிக்கப்பட்டவை 2, 421
வாக்களிப்பு 25,356
பதிவு செய்த வாக்காளர்கள் 39,270

### மானிப்பாய் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி - | 10,302 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்- | 6,999 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி- | 2,838 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 1,482 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 1,062 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி- | 3,740 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி- | 6,678 |
| சுயேச்சைக் குழு 5 - | 163 |
| சுயேச்சைக் குழு 8 - | 144 |

2020
செல்லுபடியானவை 35,481
நிராகரிக்கப்பட்டவை 3,482
வாக்களிப்பு 38, 963
பதிவு செய்த வாக்காளர்கள் 55,827

## பருத்தித்துறை தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 5,803 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 4,158 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி | 3,382 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 219 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 763 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 2,986 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி | 4,700 |
| சுயேச்சைக் குழு 5 | 300 |
| சுயேச்சைக் குழு 8 | 46 |

2020

| | |
|---|---|
| செல்லுபடியானவை | 23,607 |
| நிராகரிக்கப்பட்டவை | 2, 237 |
| வாக்களிப்பு | 25,844 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 37,105 |

## கிளிநொச்சி தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 31,156 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 2,528 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி | 1,827 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 346 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,050 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 2,361 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி | 1,830 |
| சுயேச்சைக் குழு 5 | 13,339 |
| சுயேச்சைக் குழு 8 | 110 |

2020

| | |
|---|---|
| செல்லுபடியானவை | 59,341 |
| நிராகரிக்கப்பட்டவை | 6,549 |
| வாக்களிப்பு | 65,990 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 92,260 |


## யாழ்ப்பாணம் தபால் மூல வாக்களிப்பு

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 7,200 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 3,223 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி | 4,347 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 735 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 632 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 3,291 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி | 1,903 |
| சுயேச்சைக் குழு 5 | 1,066 |
| சுயேச்சைக் குழு 8 | 137 |

2020

| | |
|---|---|
| செல்லுபடியானவை | 23,446 |
| நிராகரிக்கப்பட்டவை | 947 |
| வாக்களிப்பு | 24,393 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 24,829 |

# வன்னித் தேர்தல் மாவட்டம்



## முல்லைத்தீவு தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 22,492 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 2,472 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி | 2,155 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 190 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 6,087 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 3,694 |
| சிறிலங்கா பொதுஜன பெரமுன | 8,307 |

2020

| | |
|---|---|
| செல்லுபடியானவை | 50, 934 |
| நிராகரிக்கப்பட்டவை | 6, 246 |
| வாக்களிப்பு | 57,180 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 74, 540 |

## வவுனியா தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 22,849 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 3,993 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி | 4,610 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 526 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 11,178 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 4,926 |
| சிறிலங்கா பொதுஜன பெரமுன | 18,696 |

2020

| | |
|---|---|
| செல்லுபடியானவை | 81,242 |
| நிராகரிக்கப்பட்டவை | 6,129 |
| வாக்களிப்பு | 87,371 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 114,674 |

## மன்னார் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 28,266 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 1,198 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி | 1,250 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 425 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 14,632 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 2,086 |
| சிறிலங்கா பொதுஜன பெரமுன | 12,858 |

2020

| | |
|---|---|
| செல்லுபடியானவை | 58,652 |
| நிராகரிக்கப்பட்டவை | 4,024 |
| வாக்களிப்பு | 62,676 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 74,459 |

## வன்னி தபால் மூல வாக்களிப்பு

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 4,388 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 569 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி | 735 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 95 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,811 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 802 |
| சிறிலங்கா பொதுஜன பெரமுன | 2,771 |

2020

| | |
|---|---|
| செல்லுபடியானவை | 11,948 |
| நிராகரிக்கப்பட்டவை | 422 |
| வாக்களிப்பு | 12,370 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 12, 709 |

# கிழக்கு மாகாணம்

## மட்டக்களப்பு மாவட்டம்

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 79,460 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 67,692 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி | 4,960 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 833 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 28,362 |
| சிறிலங்கா பொதுஜன பெரமுன | 33,424 |

2020

| | |
|---|---|
| செல்லுபடியானவை | 298,012 |
| நிராகரிக்கப்பட்டவை | 16,838 |
| வாக்களிப்பு | 314,850 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 409,808 |

## திருகோணமலை மாவட்டம்

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 39,570 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 2,745 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி | 1,625 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,785 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 86,394 |
| சிறிலங்கா பொதுஜன பெரமுன | 68,681 |

2020

| | |
|---|---|
| செல்லுபடியானவை | 212,992 |
| நிராகரிக்கப்பட்டவை | 14,125 |
| வாக்களிப்பு | 227,117 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 288,868 |

## அம்பாறை மாவட்டம்

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 25,255 |
| அகில இலங்கை தமிழர் மகா சபை | 29,379 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 43,319 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 6,455 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 102,274 |
| சிறிலங்கா பொதுஜன பெரமுன | 126,012 |

2020

| | |
|---|---|
| செல்லுபடியானவை | 385,997 |
| நிராகரிக்கப்பட்டவை | 16,347 |
| வாக்களிப்பு | 402,344 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 513,979 |

## கொழும்பு மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 674,603 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 387, 145 |
| தேசிய மக்கள் சக்தி - | 67, 600 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 30, 875 |

செல்லுபடியானவை 1,182, 776
நிராகரிக்கப்பட்டவை 81, 034
வாக்களிப்பு 1,263, 810
பதிவு செய்த வாக்காளர்கள் 1,709, 209

## கம்பஹா மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 807,896 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 285, 809 |
| தேசிய மக்கள் சக்தி - | 61, 833 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 28, 282 |

செல்லுபடியானவை 1,228, 474
நிராகரிக்கப்பட்டவை 75, 509
வாக்களிப்பு 1,303, 983
பதிவு செய்த வாக்காளர்கள் 1,785, 964

## களுத்துறை மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 448,699 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 171, 988 |
| தேசிய மக்கள் சக்தி - | 33,434 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 16, 485 |

செல்லுபடியானவை 700, 256
நிராகரிக்கப்பட்டவை 46, 415
வாக்களிப்பு 746, 671
பதிவு செய்த வாக்காளர்கள் 972, 319

## கண்டி மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 436,507 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 215, 816 |
| தேசிய மக்கள் சக்தி - | 20, 469 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 17, 457 |

செல்லுபடியானவை 742, 804
நிராகரிக்கப்பட்டவை 52, 348
வாக்களிப்பு 795, 152
பதிவு செய்த வாக்காளர்கள் 1,029,594

## மாத்தளை மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 188,779 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 73, 955 |
| தேசிய மக்கள் சக்தி - | 7,542 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 6, 592 |

செல்லுபடியானவை 288, 073
நிராகரிக்கப்பட்டவை 24, 503
வாக்களிப்பு 312, 576
பதிவு செய்த வாக்காளர்கள் 407, 569

## நுவரெலியா மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 230,389 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 132, 008 |
| தேசிய மக்கள் சக்தி - | 5,043 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 12, 974 |

செல்லுபடியானவை 422, 977
நிராகரிக்கப்பட்டவை 42, 048
வாக்களிப்பு 465, 025
பதிவு செய்த வாக்காளர்கள் 577, 717

## அம்பாந்தோட்டை மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 280,881 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 51, 758 |
| தேசிய மக்கள் சக்தி - | 31, 362 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 5, 017 |

செல்லுபடியானவை 374, 017
நிராகரிக்கப்பட்டவை 18, 971
வாக்களிப்பு 392, 988
பதிவு செய்த வாக்காளர்கள் 493, 192

## குருநாகல் மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 649,965 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 244, 860 |
| தேசிய மக்கள் சக்தி - | 36, 290 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 26, 770 |

செல்லுபடியானவை 971, 243
நிராகரிக்கப்பட்டவை 46, 414
வாக்களிப்பு 1,017, 657
பதிவு செய்த வாக்காளர்கள் 1,348, 787

## புத்தளம் மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 220,566 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 80, 183 |
| தேசிய மக்கள் சக்தி - | 9,944 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 7, 985 |

செல்லுபடியானவை 385, 221
நிராகரிக்கப்பட்டவை 29, 266
வாக்களிப்பு 414, 487
பதிவு செய்த வாக்காளர்கள் 614, 370

## அநுராதபுரம் மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 344,458 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 119, 788 |
| தேசிய மக்கள் சக்தி - | 24, 492 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 8, 254 |

செல்லுபடியானவை 506, 902
நிராகரிக்கப்பட்டவை 35, 469
வாக்களிப்பு 542, 371
பதிவு செய்த வாக்காளர்கள் 693, 634

## பொலன்னறுவை மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 180,847 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 47, 781 |
| தேசிய மக்கள் சக்தி - | 6, 792 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 6, 525 |

செல்லுபடியானவை 245, 519
நிராகரிக்கப்பட்டவை 16, 020
வாக்களிப்பு 261, 539
பதிவு செய்த வாக்காளர்கள் 331, 109

## பதுளை மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 309,538 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 144, 290 |
| தேசிய மக்கள் சக்தி - | 19, 308 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 9, 163 |

செல்லுபடியானவை 498, 795
நிராகரிக்கப்பட்டவை 38, 621
வாக்களிப்பு 537, 416
பதிவு செய்த வாக்காளர்கள் 668, 166

## இரத்தினபுரி மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 446,668 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 155, 759 |
| தேசிய மக்கள் சக்தி - | 17, 611 |
| ஐக்கிய தேசியக் கட்சி - | 12, 349 |

செல்லுபடியானவை 648, 614
நிராகரிக்கப்பட்டவை 30, 489
வாக்களிப்பு 679, 103
பதிவு செய்த வாக்காளர்கள் 877, 582

## மொனராகலை மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 208,193 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 54, 147 |
| தேசிய மக்கள் சக்தி - | 11, 429 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 3, 494 |

செல்லுபடியானவை 280, 885
நிராகரிக்கப்பட்டவை 20, 312
வாக்களிப்பு 301, 197
பதிவு செய்த வாக்காளர்கள் 372, 155

## கேகாலை மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 331,573 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 131, 317 |
| தேசிய மக்கள் சக்தி - | 14, 033 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 12, 168 |

செல்லுபடியானவை 500, 207
நிராகரிக்கப்பட்டவை 24, 547
வாக்களிப்பு 524, 754
பதிவு செய்த வாக்காளர்கள் 684, 189

## மாத்தறை மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 352,217 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 72, 740 |
| தேசிய மக்கள் சக்தி - | 37, 136 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 7, 631 |

செல்லுபடியானவை 478, 379
நிராகரிக்கப்பட்டவை 22, 578
வாக்களிப்பு 500, 957
பதிவு செய்த வாக்காளர்கள் 659, 587

## காலி மாவட்டம்

2020

| | |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன- | 430,334 |
| ஐக்கிய மக்கள் சக்தி- | 115, 456 |
| தேசிய மக்கள் சக்தி - | 29, 963 |
| ஐக்கிய தேசியக் கட்சி- | 18,968 |

செல்லுபடியானவை 610, 052
நிராகரிக்கப்பட்டவை 35,751
வாக்களிப்பு 645, 803
பதிவு செய்த வாக்காளர்கள் 867, 709

# பெரும்பான்மை ஆசனங்களை எதிர்க்கட்சியினர் பெறவேண்டும்

*அப்போதுதான் ஜனநாயகம் நிலைக்கும் என்கிறார் ஹக்கீம்*

கொழும்பு, ஓக.7
நாட்டில் ஜனநாயகம் நிலைக்க வேண்டுமாக இருந்தால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் பிரகாரம், எதிர்கட்சியினர் பெரும்பான்மையான ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஐக்கியமான நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்குரிய ஆணை கிட்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நம்பிக்கை தெரிவித்தார். பொதுத்தேர்தலில் தனது வாக்கைப் பதிவு செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
இந்நாட்டில் ஜனநாயகத்தையும், இனங்களுக்கிடையிலான சமாதானத்தையும், சகவாழ்வையும் விரும்புகின்ற அனைத்து இன மக்களுக்கும் இந்த பொதுத் தேர்தலின் ஊடாக நல்லதொரு மக்கள் ஆணையை வழங்குவதற்கு சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. நாங்கள் கூட்டணி அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி என்ற அரசியல் இயக்கத்துக்கு இத்தேர்தலில் பெரும் மக்கள் ஆதரவு கிடைக்குமென்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. நாட்டில் ஜனநாயகம் நிலைக்க வேண்டுமாக இருந்தால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் பிரகாரம், எதிர்க்கட்சியினர் பெரும்பான்மையான ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் ஐக்கியமான நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்குரிய ஆணை எங்களுக்குக் கிட்டும்.
இந்நாட்டின் சிறுபான்மை இனங்களும் சமத்துவமான அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கான வாய்ப்பை இந்தத் தேர்தலில் எதிர்பார்க்கின்றனர். சஜித் பிரேமதாஸ தலைமையிலான எங்களது கூட்டணி வெற்றி பெறும் என்ற நம்பிக்கை மேலோங்கியுள்ளது என்றார். (ஐ)

## வடக்கு, கிழக்கு முடிவுகள் ஒரே பார்வையில்..

### யாழ்ப்பாண மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| இ.த.க | 112,967 | 31.46% | 3 |
| அ.இ.த.கா. | 55,303 | 15.40% | 1 |
| சு.க. | 49,373 | 13.75% | 1 |
| ஈ.பி.டி.பி. | 45,797 | 12.75% | 1 |
| த.ம.தே.கூ | 35,927 | 10% | 1 |

### வன்னி மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| இ.த.க | 69,916 | 33.64% | 3 |
| பெரமுன | 42,524 | 20.46% | 1 |
| ஐ.ம.ச. | 37,883 | 18.23% | 1 |
| ஈ.பி.டி.பி. | 11,310 | 5.44% | 1 |

### திருகோணமலை மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.ச | 86,394 | 40.56% | 2 |
| பெரமுன | 68,681 | 32.25% | 1 |
| இ.த.க. | 39,570 | 18.58% | 1 |
| ஈ.பி.டி.பி. | 3,775 | 1.77% | – |

### மட்டக்களப்பு மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| இ.த.க. | 79,460 | 26.66% | 2 |
| த.ம.வி.பு. | 67,692 | 22.71% | 1 |
| மு.கா | 34,428 | 11.55% | 1 |
| பெரமுன | 33,424 | 11.22% | 1 |

### அம்பாறை மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| பெரமுன | 126,012 | 32.65% | 3 |
| ஐ.ம.ச. | 102,274 | 26.5% | 2 |
| அ.இ.ம.கா | 43,31 | 11.22% | 1 |
| தே.கா | 38,911 | 10.08% | 1 |
| அ.இ.த.ம.ச | 29,379 | 7.61% | – |

## ஜோர்தானிலுள்ள இலங்கையரை அழைத்துவர நடவடிக்கை

கொழும்பு, ஓக. 7
கொரோனா வைரஸால் ஜோர்தானில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இலங்கையர்களை அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவர்கள் அந்த நாட்டு பொலிஸாரால் அண்மையில் தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.
அவ்வாறுள்ள இலங்கையர்களில் 230 பேரையே எதிர்வரும் 18ஆம் திகதி நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

10 ஆண்டுகளுக்கு பிறகு

# நுவரெலியாவில் இ.தொ.கா. ஆட்சி!


*நவீன் திஸாநாயக்க 'அவுட்'*

கொழும்பு, ஓக. 7
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி நுவரெலியா மாவட்டத்தையும் கைப்பற்றியுள்ளது.
வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் மாவட்டமாக நுவரெலியா விளங்குகின்றது.
இந்தநிலையில் அங்குள்ள நான்கு தேர்தல் தொகுதிகளிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி வெற்றிநடைபோடுகின்றது.
நுவரெலியா, மஸ்கெலியா, கொத்மலை, வலப்பனை மற்றும் ஹங்குராங்கெத்த ஆகிய நான்கு தேர்தல் தொகுதிகளிலும் சஜித் அணி இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.
2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தை மஹிந்த அணி கைப்பற்றியிருந்தாலும் 2015 பொதுத்தேர்தல் மற்றும் 2019 ஜனாதிபதி தேர்தல்களின்போது ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அணியே நுவரெலியா மாவட்டத்தைக் கைப்பற்றியிருந்தது. இந்தநிலையிலேயே 10 ஆண்டுகளுக்கு பிறகு ராஜபக்ச தரப்பு நுவரெலியா மாவட்டத்தில் கோலோச்சியுள்ளது. ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மொட்டு அணியுடனும், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி சஜித் தரப்புடனும் இணைந்து நுவரெலியா மாவட்டத்தில் தேர்தலை எதிர்கொண்டது.
அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியடைந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாவட்டத்தில் தலைமை வழங்கிய நவீன் திஸாநாயக்க நாடாளுமன்றுக்குத் தெரிவாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-44)

# தேர்தல் தோல்வியை ஏற்றுக்கொள்கிறோம்

*ஐக்கிய மக்கள் சக்தியின் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 7
பொதுத்தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை ஏற்றுக் கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். தமது கட்சி புதிய கட்சி என்ற வகையில் தேர்தல் முடிவுகள் தமக்கு மகிழ்ச்சியைத் தருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
பிரதான எதிர்க்கட்சியாக தமது பொறுப்பை உரிய வகையில் முன்னெடுப்போம் என்றும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
பொதுத்தேர்தலுக்கான முடிவுகள் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. தேர்தல் முடிவு களின்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. இந்த நிலையில், அரச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இறுதித் தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளியாக முன்னரே ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாறு தெரிவித்துள்ளது. (கு)



பிரதமர் மஹிந்த ராஜபக்ச தங்காலையில் அமைந்துள்ள தனது வீட்டிலிருந்தவாறு, பழைய தொலைக்காட்சியில் தேர்தல் முடிவுகளை பார்த்துக்கொண்டிருக்கும் ஒளிப்படத்தை தனது முகப்புத்தகத்தில் பதிவேற்றியுள்ளார். (த)

மீண்டும்

# 56ஆவது யுகத்துக்கு திரும்பியுள்ளது ஐ.தே.க

## பொதுத்தேர்தலில் வரலாறுகாணாத பின்னடைவு

**கொழும்பு, ஓக. 7**

**இலங்கையில் பழமையான தேசிய அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பொதுத்தேர்தலில் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. தென்னிலங்கையில் பிரதான இரு கட்சிகளுள் ஒன்றாக விளங்கிய அந்தக் கட்சியானது தற்போது நான்காம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.**

வடக்கு, கிழக்கு தேர்தல் முடிவுகளையும் எடுத்துக்கொண்டால் 5ஆம் இடத்துக்கு அக்கட்சி பின்தள்ளப்பட்டுள்ளது.


1946ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியானது, அவ்வப்போது பிளவுபட்டிருந்தாலும் சஜித் பிரேமதாச தலைமையிலான அணியின் வெளியேற்றமானது அக்கட்சியின் தலைவிதியையே மாற்றியுள்ளது எனக் கூறலாம். ஒரு தொகுதியைக்கூட கைப்பற்ற முடியாத நிலை ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் 1947ஆம் ஆண்டிலும் அதன்பின்னர் 1952ஆம் ஆண்டிலும் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் வெற்றிநடைபோட்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கு, 1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலானது வரலாற்றுத் தோல்வியை வழங்கியது.

பலம் பொருந்திய அரசியல் கட்சியாகக் கருதப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியால் 8 ஆசனங்களை மாத்திரமே கைப்பற்றக் கூடியதாக இருந்தது. பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தைக்கூட அக்கட்சியால் பெறமுடியாமல் போனது.

எனினும் அதன்பின்னர் மீண்டெழுந்த ஐக்கிய தேசியக்கட்சி 1965இல் ஆட்சியைக் கைப்பற்றியதுடன், 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் அரியணை ஏறியது. அதன்பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் படுதோல்வியை சந்தித்தில்லை. ஆனால், இம்முறை நடைபெற்ற தேர்தலானது பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. (ம-44)

## கல்விச் செயற்பாட்டுக்கு சிறுவர்களை இணைத்தல்



காங்கேசன்துறை, ஓக. 7

காங்கேசன்துறை நல்லிணக்க மத்திய நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள கல்விச் செயற்பாட்டுக்கு சிறுவர்களை இணைக்கும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் கல்வி கற்கும் சிறுவர், சிறுமியர்களை கல்வியில் மேம்படையச் செய்யும் நோக்கில் யாழ் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவன் வணிகசூரிய எண்ணக்கருவுக்கு அமைய இந்த நிலையம் அமைக்கப்பட்டது.

'விது அறக்கொடை நிலையம்' மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டின் கீழ் நடத்தப்படவுள்ள சிங்களம், ஆங்கிலம், கணிதம், சங்கீதம், ஆகிய பாடநெறிகள் மற்றும் யோகா பயிற்சிப்பாடநெறிகள் என்பவற்றில் ஆர்வமுள்ள மாணவர்கள் பதிவுகளை மேற்கொண்டனர். இந்நிலையில் சிறுவர்களையும் இதில் இணைக்கும் செயற்பாடு நேற்று யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி தலைமையில் நடைபெற்றது. (ஐ)

# பெய்ரூட் நகர பெருவெடிப்பில் 10 இலங்கையர் காயமடைவு

கொழும்பு, ஓக. 7

லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்ற பெரும் வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த இலங்கையர்களின் எண்ணிக்கை 10ஆக உயர்ந்திருப்பதாக லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தூதரகத்தினால் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில், இந்தச் சம்பவத்தில் இரு இலங்கையர்கள் காயமடைந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மேலதிக தகவல்களுக்காகக் காத்திருப்பதாகவும் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தோரின் எண்ணிக்கை 10ஆக உயர்ந்திருப்பதாக இத் தூதரகம் அறிவித்துள்ளது.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கடந்த செவ்வாய்கிழமை மிகப்பெரும் வெடிப்புச்சம்பவம் ஒன்று பதிவானது. இதனால் பெய்ரூட் நகரில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகமும் சிறியளவான பாதிப்பிற்கு உள்ளாகியிருந்த போதிலும், தூதரக அதிகாரிகளுக்கு எவ்வித காயங்களோ அல்லது பாதிப்புக்களோ ஏற்படவில்லை.

லெபனானில் சுமார் 25 ஆயிரம் இலங்கையர்கள் வசிப்பதுடன், எந்த நேரமும் தொடர்பு கொள்ளக் கூடியவாறான 24 மணிநேரம் சேவையிலுள்ள தொலைபேசி இலக்கத்தை லெபனானிலுள்ள இலங்கைத்தூதரகம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வெடிப்புச் சம்பவத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று மாலை 6 மணிவரையில் 137ஆகப் பதிவாகியிருப்பதுடன், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம



## சின்ன வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி

சாவகச்சேரி, ஓக. 7



வெங்காய அறுவடை. ஆரம்பித்துள்ளதால் தென்மராட்சி பிரதேச சந்தைகளில் சின்ன வெங்காயத்தின் விலை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

சந்தைகளில் 400 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த சின்ன வெங்காயம் தற்போது அறுவடையின் பின்னர் படிப்படியாக குறைவடைந்து நேற்று கிலோ 80 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வெங்காய விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் தாம்பெரும் நட்டத்தை எதிர்நோக்குவதாக வெங்காய உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். (ஐ-9)

# இராணுவத்தால் வீடு கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 7

யாழ்ப்பாணத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தால் வீடு அமைக்கப்பட்டு நேற்று உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் உடுவில் தெற்கு பிரதேசத்தில் வசிக்கும் நந்தினி ரதீஸ்வரன் என்பவருக்கே இந்த வீடு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ருவன் வணிகசூரிய தலைமையில் நடைபெற்ற



நிகழ்வில் 51ஆவது கட்டளைத் தலைமையகத்தின் தளபதி, 511 ஆவது படைப்பிரிவின் படைத்தளபதி, இராணுவ உயரதிகாரிகள், இராணுவ வீரர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## குடிதண்ணீர் வடிகட்டி கையளிப்பு

சாவகச்சேரி ஓக.7

சாவகச்சேரி நகரசபையின், மீசாலை பொது நூலகத்துக்கு குடி தண்ணீர் வடிகட்டி வழங்கப்பட்டுள்ளது.

நூலகத்துக்கு வரும் மக்களின் தண்ணீர் தேவையை நிறைவு செய்யும் வகையில் புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகை தந்த கோ.ரீமுருகன் மற்றும் ஞானச்சந்திரன் நளாயினி ஆகியோரால் குடிதண்ணீர் வடிகட்டி வழங்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## ஆலயப் பெருவிழா

கொடிகாமம் , ஓக.7
மாதகல் அரசடி சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை கப்பல் திருவிழாவும், 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 24 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும்,26 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-159)

## சங்காபிஷேக பெருவிழா


கொடிகாமம்,ஓக.7
கைதடி கிழக்கு அருள்மிகு வீரமாகாளி அம்பாள் கோவில் கும்பாபிஷேக தின நவோத்தர சகஸ்ர சங்காபிஷேக பெருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து ஆலயத்துக்கு வருகை தருமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-159)

## துர்க்கை அம்மனுக்கு 20 இல் கொடியேற்றம்

தெல்லிப்பழை, ஓக.7
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 12 நாள்கள் திருவிழா நடைபெறும். 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத் திருவிழாவும்,30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப பூசை நேரங்கள் மாற்றப்படும். அடியார்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்துக்கு வருகைதருமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## மண்டலாபிஷேக பூர்த்தி

கொக்குவில், ஓக.7
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் குடமுழுக்கைத் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேக பூர்த்தி இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகமும், சிறப்பு பூஜை வழிபாடுகளும் நடைபெறும்.
தொடர்ந்து அம்பாள் அலங்கரிக்கப்பட்ட பூத்தண்டிகையில் உள்வீதி,வெளிவீதி வலம் வருவார் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)









நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 13 ஆம் நாள் திருவிழா நேற்று மாலை இடம்பெற்றது. முருகன் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.




## நல்லூரான் சிறப்பம்சம்

### நல்லூரான் திருவிழாவில்

அலங்காரக் கந்தனுக்கு மகா
மகா உற்சவமாம் மகோற்சவம்
நேரந் தவறாத ஒழுக்கம்
கட்டுப்பாடு மாறாத ஆலயமே
நல்லையம்பதி இதற்கு நிகர் ஏது?
யாசகர்களும் பெருங் கோமகனும்
ஆலய சந்நிதியில் சரிசமனே
ஒற்றை ரூபா போதுமே முருகனே
நாமம் செப்பி அர்ச்சிக்க
விரையுமின் விரையுமின் அகக்
கண்ணால் கண்டு கைதொழுது
அவன் கழல் பற்ற நல்லூரான் திருவிழாவில்

*எஸ்.எஸ் உமாசிவம், ஏழாலை*

### வரமருள் நாயகனே

நித்த மொளி தரு சித்திர தீபங்கள்
நல்லை நகரை மெருகூட்ட
நீலமாமணி மிடறுடை நாயகன் தன்னில் வேறன்றி
எத்திசை நோக்கினும் எழிலுறு அருளொளி
சிந்திடும் திருக்கோலம்
சீர்மயில் வாகனன் அமரர் தம் வேதனை
நீக்கிடவே வந்தோன் மூவிரு முகங் கொண்டருளிடும் பரனே
எமையாள் காங்கேயா
திருவருள் ஒளி சுரங் தெமதிடர் வேதனை
நீக்கிட வா முருகா
கொடிய கொரோணா சூண்டோடு ஒழிந்திட
வரம் நல்கிடு நாயகனே

கலைமாமணி
க.லோகேஸ்வரன் தொல்புரத்தூர்

### வீதி வலம் நீ வர வேண்டும்

ஓம் எனும் ஓங்காரக் கந்தனானவனே!
ஒற்றை ரூபாய் அர்ச்சனை நாயகனே!
ஓதுகின்றோம் நிதம் பாமாலைகளால்
ஓயாமலே அல்லும் பகலுமே முருகா !
ஒளிந்திருக்கும் கொடிய கிருமியை நீக்கி
ஓரம் கட்டி நின் அடியார்களை ஆலயமதில்
ஒன்றிணைத்து வீதி வலம் நீ வர வேண்டும்!

*அரியாலையூர் மிஷாந்தி செல்வராஜா*



# வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களில் சிக்கல் ஏதுமில்லை

## ஜாலிய சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஓக.7

வாக்கு எண்ணும் மத்திய நிலையங்கள் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் பாதுகாப்புத் தொடர்பாக எந்தவித சிக்கல்களும் இல்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், வாக்கெண்ணும் நிலையங்களை அண்மித்த பகுதிகளில் விசேட பாதுகாப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வாக்கெண்ணும் நிலையங்களின் பாதுகாப்புக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜயசூரிய கூறியுள்ளார்.

மேலும், பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெற்றுள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 362 ஆக அதிகரித்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியுடன் நிறைவடைந்த தேர்தல் காலப்பகுதியில் குற்றச்செயல்கள் தொடர்பாக 104 முறைப் பாடுகள் பதிவாகியுள்ளன. தேர்தல் விதி மீறல் தொடர்பில் 314 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. (ரி-2)





# நாட்டில் இதுவரை 166,737 பி.சி.ஆர். பரிசோதனைகள்

கொழும்பு, ஓக.7

இலங்கையில் இதுவரை ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 737 பி.சி.ஆர்.சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் தேசிய மையம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை மாத்திரம் 880 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 839 ஆகப் பதிவாகியுள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை 287 ஆக பதிவாகியுள்ளது என்று அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2ஆயிரத்து 541 ஆக உயர்ந்துள்ளது. அதேநேரம் கொரோனாத் தொற்று சந்தேகத்தின் பேரில் 68பேர் நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## தென்மராட்சியில்

# தரம் ஐந்து மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு

சாவகச்சேரி, ஓக.7

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் குழந்தைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து, சபையின் ஆரக்ஷாவ திட்டத்தின் கீழ், கடந்த வருடம் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆரக்ஷாவ குழந்தைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணையும் மாணவர்கள் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றால் 5 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் சான்றிதழும், க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் ஐந்து அதிதிறமைச் சித்தியுட்பட 9 பாடங்களிலும் சித்தி பெறும் மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் சான்றிதழும், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதி பெறும் அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும் தலா 20 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஆரக்ஷாவ ஓய்வூதியத் திட்டத்தில் 117 வயது வரையானவர்கள் இணைந்து கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ரி-2)

# இனந்தெரியாத கும்பலால் குடும்பஸ்தர் தாக்குதல்

சாவகச்சேரி, ஓக.7

வீதியால் சென்ற குடும்பஸ்தர் ஒருவரை இனந்தெரியாத கும்பல் ஒன்று வழிமறித்து மோசமாகத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி நகரப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த 33 வயதுடைய குடும்பஸ்தரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். (ரி-2-9)

# நாட்டில் பண வீக்கம் திடீரென அதிகரிப்பு

கொழும்பு, ஓக.7

இலங்கையில் கடந்த ஜூன் மாதத்தை விட ஜூலை மாதத்தில் பண வீக்கம் அதிகரித்துள்ளது என புதிய புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைக் குறியீட்டில் (சி.சி.பி.ஐ 2013 = 100) ஓர் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்பட்ட பணவீக்கம் 2020 ஜூலை மாதத்தில் 3.9 சதவீதத்திலிருந்து 4.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாகவே இலங்கையில் பணவீக்கத்தின் அளவு அதிகரித்துள்ளது.

இது முக்கியமாக உணவு அல்லாத பிரிவிலுள்ள பொருள்களின் விலையில் மாதாந்த அதிகரிப்பு மற்றும் ஜூலை 2019 இல் நிலவிய குறைந்த தளத்தின் புள்ளிவிவர விளைவுகளால் ஏற்பட்டது என்று பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

உணவுப் பணவீக்கம் 2020 ஜூலையில் 10.0% ஆக இருந்து 10.9% ஆக உயர்ந்துள்ளது. மேலும், உணவு அல்லாத பணவீக்கம் 2020 ஜூலையில் 1.4% ஆக இருந்து 1.5% ஆக அதிகரித்துள்ளது.

வருடாந்த சராசரி அடிப்படையில் அளவிடப்பட்ட சி.சி.பி.ரி இன் மாற்றமும் 2020 ஜூலையில் 4.7% ஆக இருந்து 4.8% ஆக ஓரளவு அதிகரித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைக் குறியீட்டின் மாதாந்த மாற்றம் 0.1% ஆக பதிவாகியுள்ளது. (ரி-2)

## சுற்றுலாவிகளைக் கவர

# அழகாகிறது செம்மணி!

யாழ்ப்பாணம், ஓக்.7

'யாழ். வரவேற்கின்றது' செம்மணி வளைவை அண்மித்த பகுதி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அழகுபடுத்தப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நல்லூர் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதியில் பூங்கன்றுகள் மற்றும் நிழல் மரங்கள் என்பன நடுகைசெய்யப்படவுள்ளன.

சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் பொழுதுபோக்கும் முகமாக இந்தப் பகுதியில் இருக்கைகள் மற்றும் நிழற்குடைகள் அமைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் மாரி காலத்தில் செம்மணி பகுதியில் கூடுதலான நிழல் மரக்கன்றுகளை நடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

ஓமான் நாட்டில்

# இலங்கைப் பெண் ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள்

கொழும்பு, ஓக.7
ஓமான்நாட்டில் இலங்கை பெண் ஒருவர் மூன்று குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.
ஓமானில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் ஊழியரான ருவாந்தி திலினி என்ற பெண்ணே, மூன்று குழந்தைகளைப் பிரசவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில், மஸ்கட்டில் உள்ள இலங்கை தூதரகம் குறித்த இலங்கை பெண்ணுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் இலங்கை தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-
"வைத்தியர் தஹிரா கஸ்மி, குறித்த இலங்கை பெண்ணுக்கு முக்கியமான அறுவை சிகிச்சை, மகப்பேறியல் மற்றும் பிரசவத்தை வெற்றிகரமாகச் செய்துள்ளார். இப்பெண்ணுக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை வைத்தியர் தஹிரா கஸ்மி முன்னதாகவே ஒழுங்கு செய்திருந்தது.
இந்தப் பெண் தனது மூன்று குழந்தைகளை வெற்றிகரமாக மற்றும் அமைதியான முறையில் பிரசவிப்பதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் மற்றும் நெருக்கடியான இந்த நேரத்தில் ஓமானில் இருக்கும் இலங்கையர்களை சிறப்பாகக் கவனித்துக் கொண்டமைக்கு அந்நாட்டு அரசாங்கத்திற்கும் நன்றி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-3)

# இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலி வாயிலாக 20 நாள்களுக்கு இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.
இதன் பத்தாவது நாளாகிய இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை முன்னாள் விரிவுரையாளர் முனைவர் த.கலாமணி, இலங்கையில் மேலைத்தேயத்தவர் வருகையும் தமிழ்க்கல்வி மாற்றமும் என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.
இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி-3)
Zoom meeting ID : 477 159 8996

# சடலங்கள் மீட்பு



கொழும்பு, ஓக.7
இரு வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.
கொழும்பு துறைமுக நகர் அருகில் இருந்து ஒரு சடலமும், பேலியாகொடை களனி கங்கை கறுப்பு பாலம் அருகாமையில் இருந்து ஒரு சடலமும் மீட்கப்பட்டுள்ளன.
ஆண்கள் இருவரின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன எனவும், சடலமாக மீட்கப்பட்டவர்கள் இது வரை அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி-3)



தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயர் மற்றும் சின்னம் என்பன ஒரு மாட்டின் மீது குறிசுடப்பட்டு, மட்டக்களப்பு ஊறணி சரஸ்வதி வித்தியாலய வாக்குச்சாவடியின் முன்பாக கட்டப்பட்டு இருந்துள்ளது. இந்தச் செயலைச் செய்தவர்கள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ரி-3)

# ஜேர்மனியிடமிருந்து இலங்கைக்கு 2.05 மில்லியன் யூரோ நிதி உதவி



**கொழும்பு, ஓக.7**
**இலங்கைக்கு மேலதிகமாக 2.05 மில்லியன் யூரோ நிதி உதவியை வழங்குவதற்கு ஜேர்மனி அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.**

கொவிட்19 காரணமாக ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார தாக்கத்தில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளுக்கு இந்த நிதி வழங்கப்படவுள்ளது. இலங்கைக்கும், ஜேர்மனிக்கும் இடையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கைக்கு அமைய 11 மில்லியன் யூரோ நிதியுதவி ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி-3)

# எஸ்.எவ் லொக்கா கொலை; சந்தேகநபர்களுக்கு வலைவீச்சு



அனுராதபுரம், ஓக.7
எஸ்.எவ் லொக்கா என்ற எரோன் ரணசிங்க கொலைசெய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை உடனடியாகக் கைது செய்து, நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது.
அனுராதபுரம், தஹாயியாகம சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த அடையாளம் தெரியாத இருவரினால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
சம்பவத்தில் எஸ்.எவ் லொக்கா பலியானதுடன், அவர் பயணித்த கார் தீப்பற்றி சேதமடைந்துள்ளது பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
ரி-56 ரக தானியங்கி துப்பாக்கியில் சுமார் 8 துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், காரில் பயணித்த எஸ்.எவ் லொக்காவின் காதலிக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை உடனடியாகக் கைதுசெய்து, நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் இடம்பெற்ற நீதவான் பரிசோதனைகளின் பின்னர், அனுராதபுரம் பிரதான நீதிவான் ஜனக்க பிரியந்த சமரசிங்கவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில், துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச் சென்றவர்கள் தொடர்பான சி.சி.டி.வி காணொளி பதிவு ஊடாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், 7 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை, அனுராதபுரத்தில் 2015ம் ஆண்டு இரவு விடுதியொன்றில் வைத்து கராட்டே சாம்பியனான வசந்த சொய்சா கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான எஸ்.எவ் லொக்காவே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-3)

# பொறுப்பை முறையாக நிறைவேற்றியுள்ளோம்

*சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய பெருமிதம்*

**கொழும்பு,ஓக.7**

**பொதுத்தேர்தலை ஜனநாயக முறையிலும், பாதுகாப்பான முறையிலும் நடத்துவதற்குத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வழங்கிய பொறுப்பை முறையாக நிறைவேற்றியுள்ளோம் எனத் தேர்தல்களுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரியான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.**

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

9ஆவது நாடாளுமன்றத்தைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் அமைதியான முறையில் இடம்பெற்று முடிந்துள்ளது. தேர்தல் இடம்பெற்ற தினத்தில் மாத்திரம் 288 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் கூடுதலாக 40 முறைப்பாடுகளும், மாத்தளை மாவட்டத்தில் 2 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. மன்னார் மாவட்டத்தில் எவ்வித முறைப்பாடுகளும் இடம்பெறவில்லை. கொலை, படுகாயம், மற்றும் தீ விபத்து எனப் பாரதூரமான சம்பவங்கள் ஏதும் பதிவாகவில்லை.

2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தப் பொதுத்தேர்தல் சிறந்த முறையில் இடம்பெற்றுள்ளது.

குருநாகலை, களனி மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் வேட்பாளர்களை மையப்படுத்தியதாக அமைந்துள்ளன. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் அரைமணித்தியாலத்துக்குள் கவனம் செலுத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுத்தேர்தல் நடவடிக்கைகளுக்காக 70 ஆயிரம் சிவில் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள். தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக நிறைவுபெறும் வரையில் 70 ஆயிரம் பாதுகாப்புத் தரப்பினரும் சேவையில் ஈடுபடுவார்கள். தேர்தல் தொடர்பில் எவ்வித அச்சமும் கொள்ள வேண்டாம். இந்த தேர்தல் சிறந்தொரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது- என்றார். (ரி1)



## இறுதி வேளையில் வாக்களித்த சஜித்

கொழும்பு, ஓக.7

பொதுத்தேர்தலுக்கான வாக்களிப்பின் இறுதி நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச தனது பாரியார் சகிதம் வாக்கைப் பதிவு செய்துள்ளார்.

வீரவில குடாகம்மான 7இல் உள்ள பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் அவர் தனது வாக்கைப் பதிவுசெய்திருந்தார். காலை 7 மணி முதல் சஜித் பிரேமதாஸ வாக்களிக்க வருவார் என ஊடகவியலாளர் எதிர்பார்த்து காத்திருந்துள்ளனர். எனினும் மாலை 4.45 மணிக்கே சஜித் பிரேமதாஸ மற்றும் அவரது பாரியார் ஜலனி பிரேமதாச வாக்களிக்க வந்துள்ளனர். (ரி1)

## கட்சி ஆதரவாளர்கள் மோதல்; நால்வர் மருத்துவமனையில்

கொழும்பு, ஓக.7


இரு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, மீராவோடைப் பகுதியில் இரு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே நேற்றுமுன்தினம் மாலை இம் மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தடிகளைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்ட இச் சம்பவத்தில் நால்வர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். இத் தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி3)

## டிபென்டர் மோதி தம்பதியர் காயம்

கம்பஹா, ஓக.7

கம்பஹா மாவட்ட தேர்தல் வேட்பாளரின் ஆதரவாளர்கள் குழுவினரின் டிபென்டர் வாகனம் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில், அதில் பயணித்த தம்பதியினர் பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் மாலை மீரிகம, வெவல்தெனிய வீதியின், பண்டாரநாயக்க வித்தியாலயத்துக்கு அருகிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. தேர்தல் கடமையிலிருந்த ஓர் அரச அதிகாரி, தேர்தல் கடமைகளை முடித்தவுடன், தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோதே இருவரும் டிபென்டர் வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகி யுள்ளனர். டிபென்டர் வாகனம் ஒரு காரை முந்திச் செல்ல முற்படுகையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)



பொதுத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன பெரு வெற்றி பெற்ற நிலையில், கொழும்பு தாமரைத்தடாகம் நேற்று மின்னொளியில் ஒளிர்ந்தது. இதற்கு முன்னர் விஷேட நாள்களில் மட்டும் தாமரைத் தடாகம் ஒளிர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## பெய்ரூட் பெருவெடிப்புத் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் வேண்டும்!

*சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தல்*

பெய்ரூட், ஓக. 7

லெபனானின் பெய்ரூட்டில் இடம்பெற்ற 'வெடிப்புச் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபையும், மனித உரிமைகள் கண்காணிப்பகமும் வலியுறுத்தியுள்ளன.

2 ஆயிரத்து 750 தொன் அளவிலான அமோனியம் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த களஞ்சியத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த நிலையில், அதிகாரிகளின் ஊழல் மற்றும் புறக்கணிப்புக் காரணமாக இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாக, பெரும்பாலானோர் குற்றம் சுமத்தியுள்ள நிலையில் பெய்ரூட்டில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபையும், மனித உரிமைகள் கண்காணிப்பகமும் வலியுறுத்தியுள்ளன. (ம)

## வாக்களிப்பு நிலையத்தில் மயங்கி விழுந்த பெண் சாவு

மினுவங்கொட, ஓக.7

மினுவங்கொட பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்களிக்கச் சென்ற பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அழுதெபொல, வலகம்பா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஜே.ஏ.சீலவானி என்ற 69 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவர் தனது வாக்கைப் பதிவு செய்து கொண்டிருந்தபோது கீழே விழுந்துள்ளார். உடனடியாக அவர் மினுவங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த பெண் இதயம் சம்பந்தமான நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என அவரது மகன் தெரிவித்துள்ளார். இதேவேளை பாணந்துறை, பெக்கமக பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்கச் சென்ற நபர் ஒருவரும் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

## திருமணக் கோலத்தில் வாக்களித்த ஜோடிகள்

கொழும்பு, ஓக.7

மணக்கோலத்தில் பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்காகச் சென்ற தம்பதியின் புகைப்படம் இணையத்தில் பிரபல்யமாகி வருகின்றது. இந்தச் சம்பவம் பன்னல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

திருமண ஆடை அணிந்த நிலையில் இந்தத் தம்பதிகள் தங்கள் வாக்குகளை வழங்கியுள்ளனர். பன்னல, கொட்டுவெல்ல சுதர்ஷனாராம விகாரையில் இவர்கள் தங்களது வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர். (ரி1)



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் மிகத் தெளிவான செய்திகளைச் சொல்லி நிற்கின்றன. தெற்கில் மொட்டு அசுரத்தனமான வெற்றியைப் பதிவு செய்துள்ள அதேநேரம், வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன் பிடியைப் பெருமளவில் நழுவவிட்டுள்ளது. கடந்தமுறை 5 ஆசனங்களை யாழ் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் பெற்றிருந்த கூட்டமைப்பு இம்முறை இரு ஆசனங்களை இழந்திருக்கிறது. வன்னித் தேர்தல் மாவட்டத்தில் கடந்த முறை கூட்டமைப்புக்கு நான்கு ஆசனங்கள் கிடைத்திருந்தன. அங்கும் இம்முறை ஒரு ஆசனத்தை கூட்டமைப்பு தொலைத்திருக்கிறது. கிழக்கிலும் இதே கதைதான்.

இப்படி கூட்டமைப்பு வடக்கு கிழக்கு என்ற பேதமில்லாமல் பின்னடைவைச்சந்திப்பதற்கு ஏனைய போட்டிக் கட்சிகளின் வளர்ச்சி, சலுகை அரசியல் மீது மக்கள் நாட்டம் என்பன தாக்கத்தைச் செலுத்தினாலும், உண்மையான காரணம் கூட்டமைப்பின் கடந்த காலச் செயற்பாடுகள் தான். மிக முக்கியமாக தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் இருந்து கூட்டமைப்பு விலகிச் செல்வதான ஒரு தோற்றப்பாடு கூட்டமைப்புக்குள்ளிருந்தே தோற்றுவிக்கப்பட்டது. இது தமிழ் மக்களை எரிச்சலூட்டியது. எந்தத் தமிழ்த் தேசியத்தின் இருப்பை நீளச்செய்வதற்காக கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அதிலிருந்து தடம் மாறி, புலி நீக்க அரசியலுக்குள் கூட்டமைப்பு புகமுற்பட்டமையால் கொதிப்படைந்த மக்கள் , அதே தமிழ்த் தேசியப் பாதையில் பயணிக்கின்ற மற்றைய இரு கட்சிகளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பவற்றுக்கு தமது ஆதரவுத்தளத்தை இடம்மாற்றிக் கொண்டனர். எனவேதான் இம்முறை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாலும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியாலும் தலா ஒவ்வொரு ஆசனத்தை கைப்பற்ற முடிந்தது.

அதேவேளை கூட்டமைப்புக்குள் எழுந்த உட்கட்சிப் பூசல்கள் ஒருகட்டத்தில் மலிந்து போய் சந்தைக்கு வந்தன. அந்த உட்கட்சிப் பூசல்களில் ஈடுபட்டவர்கள் ஒருவர் மாறி ஒருவர் சேற்றை வாரியிறைத்தனர். அவ்வாறு வீசப்பட்ட சேறு குறித்த உறுப்பினர்கள் மீது பட்டதோ இல்லையோ, மிகச் சரியாகக் கட்சியின் நற்பெயர் மீது நன்றாகவே பட்டது. நாளடைவில் அது கட்சிக்கு நாற்றமெடுக்கும் அடையாளமாகவும் மாறிவிட்டது. அந்த அடையாளம் மக்கள் மத்தியில் மனோநிலை சார்ந்த மாற்றத்தைக் கொண்டுவந்தது. கடந்த காலங்களில் கூட்டமைப்பு வாக்களித்து என்ன மாற்றம் நிகழ்ந்துவிட்டது நம் வாழ்வியலில்? ஒரு மாற்றத்தை ஏற்படுத்தித்தான் பார்ப்போமே என்ற எண்ணத்தில் தான் சைக்கிளுக்கும், மீனுக்கும் வாக்குகளை வழங்கியுள்ளனர். ஆக, தமிழ்த் தேசியத்துக்காக நிற்கும் கட்சிகளுக்கு மொத்தமாக 5 ஆசனங்கள் கிடைத்துள்ளன. அப்படிப் பார்த்தால் இம்முறை தேர்தல் முடிவுகளைத் தமிழ்த் தேசியத்தின் வீழ்ச்சியாகக் கருதமுடியாது. மாறாக தமிழ்த் தேசிய நீக்கத்தில் ஈடுபட்டால், தங்கள் நிலைப்பாட்டை மாற்றி எதிர்க்கடைகளுக்கு போகவும் தயங்கமாட்டோம் என்ற செய்தி இம்முறை வாக்குகளால் சொல்லப்பட்டிருக்கிறது.

அதேவேளை, இம்முறை புதிதாக நாடாளுமன்றப் பதவிகளை அடைந்துள்ள முன்னணியும், கூட்டணியும் இதுவரை காலமும் கூட்டமைப்பை எதிர்ப்பதை மட்டுமே அரசியல் வழிமுறையாகக் கொண்டிருந்தன. இந்த உள்ளகச் சண்டையில் பொது எதிரியைக் கண்டுகொள்ளாமல் விட்டதன் விளைவை, பேரினக் கட்சியில் போட்டியிட்ட அங்கஜன் மிகச்சரியாக அறுவடை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு கூட்டமைப்பு எதுவுமே செய்யவில்லை என்று ஒப்பாரிவைத்த முன்னணியும், கூட்டணியும் இந்த நாடாளுமன்றக் காலத்தில் எதையும் வெட்டிக் கிழிக்காவிட்டால் மீண்டும் அதே வாக்குகள் அடுத்தமுறை பழையபடி கூட்டமைப்பின் பக்கமே திரும்பவும் கூடும். அதேவேளை தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவோடு இனியும் விஷப்பரீட்சை நடத்தினால், எஞ்சிய ஆசனங்களையும் அடுத்தடுத்த தேர்தல்களில் கூட்டமைப்பு இழக்கும் நிலையும் ஏற்படலாம். தாம் என்ன செய்தாலும் ,ஒரு தும்புத்தடியை நிறுத்தினாலும் மக்கள் கூட்டமைப்புக்கே வாக்களிப்பார்கள் என்ற நினைப்பில் விழ்ந்த அடியை கூட்டமைப்பு மட்டுமல்லாது முன்னணியும், கூட்டணியும் கூட மனதிற்கொள்ளவேண்டும்.

# தேர்தலின்போது மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு முறைமையில் திருப்தி!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஓக. 7

**பொதுத்தேர்தலின்போது பின்பற்றப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் திருப்திகரமானவையாக அமைந்துள்ளன என்றும், நாட்டில் கொரோனா வைரஸ் பரவக்கூடிய அச்சுறுத்தல் நிலை இல்லை என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதித்தலைவர் மருத்துவ நிபுணர் சாகர கன்னங்கர மேலும் தெரிவித்ததாவது:

ஒன்பதாவது நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்காக நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நாடளாவிய ரீதியில் குறித்த எண்ணிக்கையிலான வாக்களிப்பு நிலையங்களுக்கு விஜயம் மேற்கொண்டனர். அவர்களால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் சொற்பளவான வாக்களிப்பு நிலையங்களில் பதிவான சில சம்பவங்களைத் தவிர பெரும்பான்மையான வாக்களிப்பு நிலையங்களில் சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகள் தேர்தல் அதிகாரிகளால் முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளன.

அதேபோன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகைதந்த வாக்காளர்களுக்கும் தொற்றுநீக்குவதற்கான (கைகழுவுதல், சனிட்டைஸர் பயன்பாடு உள்ளிட்டவை) வசதிகள் தயார்படுத்தப்பட்டிருந்ததுடன் அவை முறையாகப் பின்பற்றப்பட்டன. ஆகவே இந்தத் தேர்தல் செயற்பாடுகளால் நாட்டில் மேலும் கொரோனா வைரஸ் பரவுவதற்கான அச்சுறுத்தல் நிலைமைகள் எவையும் இல்லை - என்றார். (ம)

## முல்லையில் வாக்களிப்பு நடந்த பாடசாலைகளில் தொற்றுநீக்கல்

கொழும்பு, ஓக. 7

முல்லைத்தீவில் வாக்குச்சாவடிகள் அமைந்த பாடசாலைகளைத் தொற்றுநீக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள 68 ஆவது படைப்பிரிவினர், வாக்குச்சாவடிகளாக அமையப்பெற்ற 5 பாடசாலைகளைத் தொற்றுநீக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் அமைந்துள்ள மத்திய கல்லூரியில் தொற்றுநீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. 68 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் உபாலி ராஜபக்ஷ மற்றும் 68ஆவது படைப்பிரிவின் 2 ஆவது பிரிவு கட்டளை அதிகாரி கேணல் சமிந்த கலப்பதி மற்றும் 18 ஆவது விஜயபாகு படைப்பரிவின் தளபதி மேஜர் தர்சன சிறிசேன உள்ளிட்ட படை அதிகாரிகள் கலந்து கொண்டு தொற்று நீக்கல் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தனர். (கு-19)

## தேர்தல் விதிமீறலில் பாலித தெவரப்பெரும

கொழும்பு, ஓக. 7

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட வேட்பாளர் பாலித தெவரப்பெரும மீது சட்டவிரோத பிரசாரம் செய்தார் என்று முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரப் பணிகள் நிறைவடைந்த அமைதிக் காலக் கட்டத்தில் பாலித தெவரப்பெரும சட்டவிரோதமாக தேர்தல் பரப்புரைப் பணிகளில் ஈடுபட்டார் என முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையம் தெரிவித்துள்ளது. (ம)

## சீரற்ற காலநிலை: 10 மாவட்டங்கள் பாதிப்பு

கொழும்பு, ஓக. 7

நாடு முழுவதும் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக பத்து மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிபிலி தெரிவித்ததாவது:

நாடு முழுவதும் வீசிய பலத்த காற்று காரணமாக 483 வீடுகள் சேதமடைந்துள்ளன. குருநாகல், இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கேகாலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களே இவ்வாறு பெரும் இடருக்கு முகம் கொடுத்துள்ளன. இதேவேளை சீரற்ற காலநிலையால் உண்டான இடர் காரணமாக ஐவர் காயமடைந்தும் உள்ளனர். இந்த இயற்கை இடரால் நாட்டின் பல மாவட்டங்களுக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது - என்றார். (ம)


# திருமலை வாக்கெண்ணும் நிலையத்தில் நேற்றுக் குழப்பம்!

திருகோணமலை, ஓக. 7

திருகோணமலை விபுலானந்தா கல்லூரி வாக்கெண்ணும் மத்திய நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் பதற்ற நிலை ஏற்பட்டது. பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் ஒருவர் வாக்கெண்ணும் நிலையத்துக்குள் செல்ல முற்பட்டதாலேயே பதற்ற நிலை ஏற்பட்டது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த வேட்பாளர் உரிய இடத்துக்கு வருகை தந்தபோது அவரிடம் பொருத்தமான அனுமதிப்பத்திரம் இன்மையால் அவரை உள்ளே நுழைய அனுமதிக்காது பொலிஸார் வாக்கு எண்ணும் நிலையத்தில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதையடுத்தே அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது. (ம)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.07.2020 சனிக்கிழமையன்று இறைபதம் எய்திய எமது
குடும்பத்தலைவர்
கோப்பாய் மத்தி கிழவானை ஒழுங்கையைச் சேர்ந்த

## அமரர் அப்பாக்குட்டி சுப்பிரமணியம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (08.08.2020) சனிக் கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் பின்னர் 10.08.2020 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது மகனின் இல்லத்தில் சபிண்டீகரண கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

குடும்பத்தினர்.
077 344 4067, 076 6233128
077 195 7971

# மரண அறிவித்தல்



பிறப்பு 30 . 06 . 1943

இறப்பு 06 . 08 . 2020

காலஞ்சென்ற தவில் மாமேதை
N.R.சின்னராஜா அவர்களின் துணைவியார்

## திருமதி இராஜேஸ்வரி சின்னராஜா

(தவில் வித்துவான்கள் ரவீந்திரன் மற்றும் சுதாகரனின் தாயார்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் இணுவில் கந்தசுவாமி கோயிலடியை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சின்னராஜா நேற்று (06.08.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவில் மாமேதை N.R.சின்னராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான க. சுப்பிரமணியம் - குணரத் தினம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தசாமி கோயில் வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(J 12719)(13.17)

077 628 0254, 077 519 4510

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 05 . 1930

மறைவு 05 . 08 . 2020

## திருமதி பசுபதி புஸ்பவதி

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் திருநகர் 4 ஆம் யுனிற் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பசுபதி புஸ்பவதி அவர்கள் 05.08.2020 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலர் - பசுபதி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமநாதர் - சின்னம்மா ஆகியோரின் புதல்வியும், காலஞ்சென்ற மங்களேஸ்வரி (முன்னாள் கிராம சேவகர்) மற்றும் கோமளம், கதிரேசன் (ஓய்வுபெற்ற கிராம சேவகர்) கிருஷ்ணபிள்ளை, துரைரத்தினம், பத்மதேவி (ஆசிரியர் - திருநகர்/தமிழ் வித்தியாலயம்), இரவீந்திரநாதன் (பிரதி அதிபர் - கிளிநொச்சி / மகா வித்தியாலயம்), கிரிஜகலா (பிரதிப் பணிப்பாளர் - கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, யோகம்மா, கோபால் மற்றும் சேதுப்பிள்ளை, பார்வதி, பேரம்பலம், துரைராஜா, புவனேஸ்வரி, லலிதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகரத்தினம், வேலாயுதம், பத்மகுமாரி (ஆசிரியர் - யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), கமலராணி (ஓய்வுபெற்ற அதிபர் - யா/ இராமநாதன் கல்லூரி), டயோசினி (ஆசிரியர் - வவுனியா - பெரியதம்பனை மகாவித்தியாலயம்), பாலசுப்பிரமணியம், ஆகவணியம் (ஆசிரியர் - கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம்), சிவானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், அருளப்பு, கிளாரம்மா, அற்புதமலர், சிவஞானசுந்தரம், குலசிங்கம், குகராஜா மற்றும் வரதராசா, தவமணி, யேசுதிலகம் ஆகியோரின் மைத்துனியும் திருவரங்கன், செந்தூரன், சிவானந்தி, சசிதரன், சிவாகரன், சுசிதரன், சதாநந்தி, கௌரிபாலன், வேணுகோபன், தனஞ்செயன், பகீரதி, ஜெயகாந், சுகபாணி, பிரியங்கன், சர்வாங்கி, கேதாங்கன், அட்சயா, அபிநயா, வித்தியதாரணி, திருவேரகன், திருவேணி, சப்தகி, பிரணவன், அபிராமி, கஜமுகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வைத்ரா, நிதுரா, கயல், ஜதிகாருணி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநகர் - மல்லாவியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (07.08.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(J 12719)(13.17)

# மரண அறிவித்தல்



## அப்பையா கணேஷலிங்கம் (கணேஷ்)

இணுவில் கிழக்கு, காரைக்கால் சிவன்கோவிலடியை பிறப்பிடமாகவும், சுவிஸ் (சூரிச்சை) வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா கணேஷலிங்கம் நேற்று (06.08.2020) வியாழக்கிழமை சுவிஸ் (சூரிச்சில்) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பையா - சரஸ்வதியின் அன்புப் புதல்வனும், ரஜனியின் அன்புக் கணவரும் சபீனனின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராமநாதன் - வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணி (இந்தியா), சோமசுந்தரம் (அபிராமி பெஷன் ஹவுஸ் - சுன்னாகம்), புஸ்பராணி, புஸ்பலிங்கம் (கனடா), யோகராணி, சண்முகலிங்கம் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் கிருஷ்ணாம்பாள், நவரத்தினராசா, சிவமலர் (கனடா), வீரசிங்கம், ஒபிலியா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
அ. சோதிலிங்கம்
(அபிராமி பெஷன் ஹவுஸ்
சுன்னாகம்)

காரைக்கால் சிவன் கோவிலடி,
இணுவில் கிழக்கு.
077 228 4490 - சோதிலிங்கம்
077 475 0132 - புஸ்பராணி

# கண்ணீர் அஞ்சலி

## கணபதிப்பிள்ளை தெய்வேந்திரராஜா (தேவா)

(சிரேஷ்ட திட்ட முகாமையாளர்
தேசிய நிலையம் - கரித்தாஸ் இலங்கை செடெக்)



துண்டுபட்ட தனிமனிதன் அல்ல
ஒன்றுபட்ட மனிதகுலம் முன்னேற
வன்னி மக்களின் ஈரவிழிகளை
கரம்சுமந்து போரின் அனர்த்தத்
தினாலும், இயற்கை அழிவிலும்,
வறுமையின் கோரப்பிடியிலும்,
கியூடெக் வன்னி நிறுவனத்துடன்
இணைந்து வழிகாட்டியாக,
ஆலோசகராக எம்மில் ஒருவராய்
இணைந்து பணியாற்றி கடந்த
(05.08.2020) புதன்கிழமை
இறைபதமடைந்த க. தெய்வேந்திர
ராஜா அவர்களின் ஆன்மா
அமைதிபெற இறைதுணை
வேண்டுகின்றோம்.

இயக்குனர், பணியாளர்கள்.
கியூடெக் கரித்தாஸ், வன்னி.

# ஆணின் பெயரில் பெண் வாக்களிப்பு

கொழும்பு, ஒக. 7

கொழும்பின் புறநகர் பகுதியான அத்தடிய பகுதி வாக்களிப்பு நிலையத்தில் ஆணின் பெயரில் பெண் ஒருவர் வாக்களித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


தனது வாக்கை வழங்குவதற்கு ஆண் ஒருவர் வாக்களிப்பு நிலையத்துக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார். எனினும், குறித்த வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கை ஏற்கனவே யாரோ ஒருவர் வாக்களித்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. அது மிகப்பெரிய அநீதி என்றும் அந்த நபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் குறித்த பகுதி கிராம அலுவலரிடம் வினவியபோது, சிறிய தவறு ஏற்பட்டுள்ளதாக கிராம அலுவலர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் வினவுவதற்கு வாக்களிப்பு நிலையப் பொறுப்பதிகாரியிடம் சென்றேன் என்றும் எனினும் அதற்கு அனுமதி கிடைக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# மரண அறிவித்தல்

## சிதம்பரம் குமாரவேலு

(ஓய்வுபெற்ற தபாலதிபர், தபால் போதனாசிரியர் நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், தனியார் கல்வி நிறுவன விஞ்ஞான பாட ஆசிரியர்)



காரைநகர் மருதடியைப் பிறப்பிடமாகவும் வட்டுக் கிழக்கு சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரம் குமாரவேலு (06.08.2020) வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரம் - வள்ளியம்மை தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னையா இளையபிள்ளை தம்பதியினரின் மருமகனும் சற்குணதேவியின் (இளைப்பாறிய ஆசிரியை நீர் / அல்ஹில்லால் மத்திய கல்லூரி) கணவரும் அம்பலம் (ஓய்வு பெற்ற பொறியியலாளர்), பழனிமலை (ஆஸ்திரேலியா), மனோன்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற சற்குணராசா(ஓய்வுபெற்ற போறாட் உத்தியோகத்தர்) மற்றும் கருணைராசா (பொறியிலாளர் ஜோன் கீலஸ் Project) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சங்கானை வழுக்கை யாற்று மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. சற்குணதேவி (மனைவி)

077 129 5854

# பிறர் உதவியின்றி முதன்முறை விழிப்புலனற்றோர் வாக்களிப்பு!

## புதிய முறையில் நடைபெற்றது

கொழும்பு, ஒக. 7

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலில் முதன் முறையாக விழிப்புலனற்ற வாக்காளர்கள் மற்றொருவரின் உதவியின்றி வாக்களித்துள்ளனர்.

2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது விழிப்புலனற்ற வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை தாங்களாகவே பதிவு செய்ய உதவும் வகையில் ஒரு புதிய முறையை தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிமுகப்படுத்தியிருந்தது. அதன் அடிப்படையிலேயே வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.


வாக்குப்பதிவின் போது விழிப்புலனற்ற வாக்காளர்களின் ரகசியத்தன்மையைப் பாதுகாக்க இலங்கை விழிப்புலனற்றோர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைய இந்த சிறப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த சிறப்பு செயற்றிட்டத்தின் கீழ், விழிப்புலனற்ற வாக்காளர்களுக்கு ஒரு சிறப்பு 'ஸ்டென்சில்' வழங்கப்பட்டுள்ளது.

அதில் அவர்கள் வாக்குச் சீட்டைச் செருகலாம், பள்ளங்கள் மற்றும் பெட்டிக்களை ஸ்டென்சில் வெட்டுவதை உணர்ந்து அவர்களின் வாக்கைக் குறித்துள்ளனர்.

இதனால் அவர்களது ரகசியத்தன்மை பாதுகாக்கப்பட்டுள்ளதுடன், வாக்குச் சாவடிகளில் தேர்தல் அதிகாரிகளின் உதவியின்றி அவர்கள் முதன்முறையாக வாக்களித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# மரண அறிவித்தல்



மண்ணில் 11 . 10 . 1948

விண்ணில் 05 . 08 . 2020

## முத்தையா வடிவேலு

வறணியை பிறப்பிடமாகவும், மாரியம்மன் வீதி, கோப்பாய் மத்தி, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா வடிவேலு நேற்று (06.08.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ரஞ்சிதமலர் (மலர்) அவர்களின் அன்புக் கணவரும், ரஞ்சித்குமார் (ரமேஸ்), ரஜித்தா, காலஞ்சென்ற வனித்தா, அனித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ரமேஸ், ஜெனிற்றா, நீகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரெனிஷிகா, பரிவேஸ், மிதுஷா, தர்ணிகா, திருஷிகா யர்வின், ஆரபி, ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்

# மரத்திலிருந்து தவறி வீழ்ந்த முதியவர் சாவு

யாழ்ப்பாணம், ஒக. 7

சீவல் தொழிலில் ஈடுபட்ட முதியவர் ஒருவர் தென்னை மரத்தில் இருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை வீதியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அருகில் நேற்றுக் காலை 6.45 மணியளவில் இடம்பெற்றது. கோப்பாயைச் சேர்ந்த சீவல் தொழிலாளியான வடிவேல் (வயது- 74) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-17)

# மரண அறிவித்தல்

## சிவஸ்ரீ சிவசுப்பிரமண்ய ஐயர் இரவீந்திரகுருக்கள்



தோற்றம் 19.12.1961 மறைவு 05.08.2020

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும், இந்தியா, திருச்சியை வசிப்பிடமாகவும் கொண்டவரும், கோண்டாவில் மேற்கு, ஸ்ரீமகாகணபதிப்பிள்ளை யார் ஆலயஸ்தாபகரும், தர்மகர்த்தாவுமாகிய பேராசிரியர் சதாசிவக் குருக்களுடைய பேரன் சிவஸ்ரீ சிவசுப்பிரமண்ய ஐயர் இரவீந்திரகுருக்கள் கடந்த (05.08.2020) புதன்கிழமை விண்ணுலகெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கோண்டாவில் சதாசிவ குருக்களின் பேரனும் சிவசுப்பிரமணிய ஐயர் - விசாலாட்சி அம்மாவின் புத்திரனும், சித்கலா மாலினியின் அன்புக் கணவரும், சத்தியசூரி, வித்தியாசாகரன், நித்யரூபன், விருஷாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள் (கோண்டாவில்), நிரஞ்சனா, பிரியதர்சினி, நளாயினி ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.08.2020) வியாழக்கிழமை திருச்சியில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள மனநோய் வயப்பட்ட (Dementia) வயதான முதியவரை உடன் இருந்து அன்றாடம் அவர் தேவைகளை அனுசரணையோடு கவனித்துக் கொள்ளும் வேலையாள் (ஆண் 40-55) க்குள் தேவை. மனநோயாளிகளை (Caretaker) பராமரிப்பதில் முன் அனுபவமோ வைத்தியசாலையில் பராமரிப்பு வேலைகளில் அனுபவம் உள்ளவராகவோ இருத்தல் வேண்டும். தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் செய்யப்படும். சம்பளம் ஏற்றபடி

தொடர்பு 077 222 9772


# புலி மீதான தடையை நீடித்தது ஐ. ஒன்றியம்!

கொழும்பு, ஓக. 7

**விடுதலைப் புலிகள் உட்பட 20 அமைப்புகளுக்கு விதித்துள்ள தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீடித்துள்ளது.**

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தடை அதன் 30 உறுப்பு நாடுகளில் நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள், பாபர் கஹால்சா, ஹிஸ்புல் முஜாதீன், காலிஸ்தான் சிந்தபாத் ஹமாஸ், ஹிஸ்புல்லா, துருதிஷ்தான் தொழிற்கட்சி, பாலஸ்தீன இஸ்லாமிக் ஜிகாத் உட்பட 20 அமைப்புகளுக்கான தடை நீடிக்கப்பட்டுள்ளது. இது பற்றிய முடிவை ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஜூலை 30 ஆம் திகதி தீர்மானித்துள்ளது.

அதேவேளை, பிரிட்டனில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரி நாடு கடந்த தமிழீழ அரசு வழக்குத் தாக்கல் செய்துள்ளது. அந்த வழக்கின் தீர்ப்பு இதுவரை வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (து)


## சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2020

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 29.08.2020 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெறும். யாப்பின் திருத்தப்பட்ட உறுப்புரை 05.09 இற்கமைய 31.01.2020 இற்கு முன்னர் உறுப்புரிமை பெற்றோரும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோருமே இக் கூட்டத்திற் கலந்து கொள்ள உரித் துடையவராவார்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 20.08.2020 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தி. செல்வமனோகரன்
செயலாளர்.


# இராவணேஸ்வரத்தில் பிரமாண்ட சிலை

யாழ்ப்பாணம், ஓக. 7

யாழ்ப்பாணம் மூளாய் இராவணேஸ்வரத்தில் சைவத் தமிழ் மாமன்னன் இராவணன் சிலையாக வடிமைக்கப்பட்டுள்ளார்.

சிவத்தொண்டர்அமைப்பு மற்றும் சைவமகா சபையினர் கூட்டுருவாக்கத்தில் கம்பீர இராவணன் சிலை அமைக்கப்பட்டுள்ளது. 11 அடி உயரத்தைக் கொண்ட இந்த உருவச்சிலையானது 10 நாள்களில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஒளிப்படங்கள் சமூகவலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளன. (க)



# மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 7

சிறிய மற்றும் ஒருநாள் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை கடற்றொழிலுக்குச் செல்ல வேண்டாம் என்று கடற்றொழில் திணைக்களம் எச்சரித்துள்ளது. நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க)


## இவரைக் காணவில்லை



பண்டாரி அம்மன் கோயிலடி, தம்பசிட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த

**சிவஞானசுந்தரம் மனோகர்**

என்பவரை **02.08.2020** முதல் காணவில்லை. இவரைக் கண்டால் கீழ்க்கண்ட தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

**076 781 0493**
**077 794 0219**


# திருநெல்வேலியில் தீ வயோதிபப் பெண் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 7

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் 67 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் திடீரென தீப் பரவல் ஏற்பட்டுள்ளது. தீயில் சிக்கி வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளார். தீ விபத்துக்கான காரணம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ,5)


## Doctor on Call Home Visit

இயலாதவர்கள், படுக்கை நோயாளிகள், முதியோர்கள் வீட்டிலேயே வைத்தியர்களின் அடிப்படை சிகிச்சைகளைப் பெறமுடியும்.

*அழையுங்கள்:- 077 316 4617*

**Lava Hospital**
**85, Clock Tower Road, Jaffna.**


## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 06 . 1930



இறப்பு 04 . 08 . 2020

### திருமதி கந்தசாமி கமலாம்பிகை

மலேசியாவை பிறப்பிடமாகவும், காரைநகர் புதுறோட்டை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்தவருமாகிய திருமதி கந்தசாமி கமலாம்பிகை கடந்த (04.08.2020) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு கந்தசாமி (அடைவுகடை கந்தசாமி)யின் அன்பு மனைவியும், கண்ணம்மாவின் அன்புத் தாயாரும், நாகரட்ணராஜாவின் அருமை மாமியும், பிரகாஷ் (பொறியியலாளர்), தருஷன் (பொறியியலாளர்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (07.08.2020) வெள்ளிக்கிழமை காலை 09.30 மணிக்கு அஞ்சலிக்காக **ROOKWOOD, LIDCOMBE, SYDNEY** மயானத்தில் வைக்கப்பட்டு பின்னர் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்.**

**தொடர்புகட்கு:- கண்ணம்மா - +614 4960 1395**
**நாகரட்ணராஜா - +614 0545 8563**

## கண்ணீர்க் காணிக்கை

**திருமதி ஞானசேகரி செபமாலை (கனகமணி)**

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் **அருட்சகோதரி ஜெயநாயகி** அவர்களின் அன்புத் தாயார் இறைபதம் அடைந்த செய்திகேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் செபங்களையும் அன்னாரின் குடும்பத்தினருக்கு காணிக்கையாக்குகின்றறோம்.



தோற்றம் 04.02.1936 மறைவு 06.08.2020

பாடசாலைச் சமூகம்
யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை திருமதி வளர்மதி உதயகுமார் அவர்களின் அன்பு தாயார்

**திருமதி**
**சின்னையா லீலாவதி**

அவர்கள் 05.08.2020 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி**
**இளவாலை**


## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்காமுடியாத நகைகளை எமது நிறுவனததின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவியரீதியில் சினேகபூர்வமான சேவை.

AAA Gold Centre 076 568 4346

## நாகபூசணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.
257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
**021 222 9306, 077 138 7596**

## பனையில் பனம் விதை பெற்றுக்கொள்ளலாம்

பனங்கிழங்கு உற்பத்தி செய்யவும், விதையாக நடுவதற்கும் உகந்த பெருந்தொகையின பனம் விதை எம்மிடம் உள்ளது.
**071 902 5745, 071 902 5722**

## தேவை

**TATA 709 மொடல் கண்டர் தேவை.**
**077 968 7961, 077 225 0149**

# மொட்டின் வெற்றிக்கு கோத்தாபய பாராட்டு

கொழும்பு, ஓக. 7

இதுவரை வெளியான தேர்தல் முடிவுகளின்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தல் முடிவுகளின்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. எங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துடன் ஒரு வலுவான நாடாளுமன்றத்தை நிறுவ முடியும் என்று நான் நம்புகின்றேன் என்று தெரிவித்துள்ளார். (எ)

## வடக்கு...

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 2015ஆம் ஆண்டு 5 ஆசனங்களைக் கைப்பற்றிய கூட்டமைப்பு, இம்முறை 3 ஆசனங்களையும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 4 ஆசனங்களைக் கைப்பற்றிய கூட்டமைப்பு, இம்முறை 3 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது.

2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 266 வாக்குகள் பெற்றிருந்த நிலையில், இம்முறை 24 ஆயிரம் வாக்குகள் வீழ்ச்சியடைந்து ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 967 வாக்குகளைப் பெற்றுள்ளது.

அதே போன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 66 ஆயிரத்து 672 வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில் இம்முறை 11ஆயிரம் வாக்குகளால் வீழ்ச்சியடைந்து 55 ஆயிரத்து 303 வாக்குகளைப் பெற்றுள்ளது.

ஈ.பி.டி.பி.60 ஆயிரத்து 254 வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில் இம்முறை 15 ஆயிரம் வாக்குகளால் குறைவடைந்து 45 ஆயிரத்து 797 வாக்குகளைப் பெற்றுள்ளது. (ஒ.5)

## திருமலையில்...

வேளை, 68 ஆயிரத்து 681 வாக்குகளைப் பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஓர் ஆசனத்தைப் பெற்றுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் இம்முறை சிங்களவர்களின் வாக்களிப்பு வீதம் அதிகரித்திருந்தது. அதற்கமைய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குக் கடந்த முறையையும் விட இம்முறை அதிக வாக்குகள் கிடைத்துள்ளன. கடந்த முறை 38 ஆயிரத்து 463 வாக்குகளை (ஆசனம் 1) ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பெற்றிருந்தது.

இதேவேளை, அங்கு இம்முறை சில மாற்றுக் கட்சிகள் (தமிழ்க் கட்சிகள்) போட்டியிட்டதால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சி கடந்த முறை 45 ஆயிரத்து 894 வாக்குகளைப் (ஓர் ஆசனம்) பெற்றிருந்தது.

இதனிடையே, கடந்த முறை 83 ஆயிரத்து 638 வாக்குகளைப் (ஆசனம் 2) பெற்றிருந்த ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை 2 ஆயிரத்து 756 வாக்குகளை மேலதிகமாகப் பெற்றுள்ளது. (எ-22)

## மஹிந்தவுக்கு...

மோடியின் வாழ்த்துக்கு நன்றி தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச, இலங்கை மக்களின் வலுவான ஆதரவோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்த இந்தியாவுடன் நெருக்க மாகப் பணியாற்ற நான் தயாராக உள்ளேன் என்று மோடியிடம் தெரிவித்தார். (ம)

## நள்ளிரவு...

நிலையில், நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வாக்கெண்ணும் நடவடிக்கைகள் நடைபெற்றன. தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு வந்த நிலையில், விருப்பு வாக்கு எண்ணிக்கை வெளியிடப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட த.சித்தார்த்தன் விருப்பு வாக்குஎண்ணிக்கையில்முன்னணியில் உள்ளார் என்று தகவல் வெளியாகியிருந்த நிலையில், அவர் விருப்பு வாக்கு எண்ணிக்கையில் பின்தள்ளப்பட் டுள்ளார் என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது. அதனால் குழப்பமடைந்த அவரது ஆதரவாளர்கள் அங்கு குவித்ததால் குழப்ப நிலைமை தோன்றியது.

த.சித்தார்த்தன் அங்கு வந்து அதிகாரிகளுடன் பேசினார். அதன்பின்னர் ஆதரவாளர்களுடனும் பேசினார். இருந்தபோதும் அங்கிருந்த ஆதரவாளர்கள் அதிகாரிகளுடன் தர்க்கப்பட்டனர். அதையடுத்து பொலிஸார் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டிய நிலைமை தோன்றியது.

அதன்பின்னர் அதுவரையும் இரண்டாம் இடத்தில் இருந்தார் என்று அறிவிக்கப்பட்ட மர்மனிதர் ரவிராஜின் மனைவியான சசிகலா ரவிராஜ் திடீரென நான்காம் இடத்துக்குத் தள்ளப்பட்டு, அந்த இடத்தை 700 வாக்குகள் வித்தியாசத்தில் சித்தார்த்தன் மூன்றாம் இடத்துக்குத் தெரிவானார். இதனால் சசிகலாவின் ஆதரவாளர்கள் பெரும் குழப்பத்துக்கு ஆளானார்கள். அதையடுத்து பெரும் அதிர்ச்சியோடு மகள்களின் கண்ணீருக்கு மத்தியில் சசிகலா அவசரமாக அங்கிருந்து வெளியேறினார்.

விருப்பு வாக்குகளை எண்ணுவதில் அதிகாரிகள் காட்டிய அசிரத்தையே இத்தகைய குழப்பங்களுக்குக் காரணம் என்று கூறி ஒரு சாரார் கடும் வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டார்கள். (எ)

## வடக்கில்...

ராதலிங்கம் ஆகியோர் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளனர். பொதுஜன பெரமுனவில் காதர் மஸ்தான் வெற்றிபெற்றுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியில் ரிஷாட் பதியுதீன் வெற்றிபெற்றுள்ளார். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைத்துள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளபோதும் அந்த ஆசனத்துக்குரிய வேட்பாளர் யார் என்பது பற்றிய இறுதி முடிவு தெரிவிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சி. சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் த. சித்தார்த்தன் ஆகியோர் அதிகளவான வாக்குகளைப் பெற்று ஆசனங்களைப் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை. (து-110)

## ரணிலுக்கு...

யக் கட்சி நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் 5 லட்சம் வாக்குகளைப் பெற்றிருந்த ரணில் விக்கிரமசிங்க இந்த முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படவில்லை.

1978ஆம் ஆண்டு அரசியல் பயணத்தை ஆரம்பித்த ரணில் விக்கிரமசிங்க அதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட 8 நாடாளுமன்றங்களுக்கும் தெரிவாகியிருந்தார்.

1994ஆம் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க உள்ள நிலையில், அவரது தலைமைத்துவம் தொடர்பாக அந்தக் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. தற்போது நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டிருந்தது. அந்தக் கட்சியின் பிரதித் தலைவராக இருந்த சஜித் பிரேமதாச, ஒரு குழுவினருடன் கட்சியில் இருந்து பிரிந்து சென்று, புதிய கூட்டணியில் போட்டியிட்டிருந்தார். இது ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருந்தது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டவரும், முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்கவும் தோல்வியடைந்துள்ளார். (எ)

## சைக்கிள்...

முறை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பலத்த எதிர்பார்ப்புகளுடன் தேர்தலைச் சந்தித்து, 55 ஆயிரத்து 303 வாக்குகளை அள்ளி மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தை அடைந்து முதன்முறையாக நாடாளுமன்றத்துக்கு பிரதிநிதி ஒருவரை அனுப்பும் வாய்ப்பைப் பெற்றது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னணியின் சார்பில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் செல்லவுள்ளார். (அ)

## கூட்டமைப்புக்கு...

கைப்பற்றிய ஒழுங்கில் கூட்டமைப்பு மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது. அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு ஆசனத்தையும் கைப்பற்றவில்லை. (ஒ.5)

## சிறைக்குள்...

றில், சிறைக்குள் இருந்து நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற இரண்டாவது தமிழ்ப் பிரதிநிதி என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றுள்ளார் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கத்தை தேவாலயத்தில் வைத்துச் சுட்டுக்கொன்ற வழக்கின் முதன்மைச் சந்தேக நபரான பிள்ளையான் இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைக் கட்சிகள் சார்பில் சிறைக்குள் இருந்தவாறே போட்டியிட்டார். தேர்தல் பரப்புரைக்காக மேடை ஏறாமலேயே அவர் வெற்றிபெற்றுள்ளார். (ம)

## புலனாய்வு...

டுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாக்கு எண்ணும் பணிகள் பாதுகாப்பான முறையில் இடம்பெற்று வருகின்றன. கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக இம்முறை தேர்தலை சுகாதார விதிமுறைகளுக்கமையவே மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் வாக்களிப்பு இடம்பெற்ற தினத்தன்று காலை முதல் இன்று வியாழக்கிழமை வரை (நேற்று) 350 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

வாக்கு எண்ணும் காலப்பகுதியில் நாட்டின் அமைதியைப் பாதுகாப்பதற்கும், வாக்கு எண்ணும் நிலையங்களின் பாதுகாப்பிற்கும் பொலிஸ் நடமாடும் சேவை தொடர்ந்தும் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 3 ஆயிரத்து 69 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க பதில் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் 2ஆயிரத்து 500 பொலிஸார் நாடளாவிய ரீதியில் புலனாய்வுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை தேர்தல் ஆணைக்குழு மற்றும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பாதுகாப்பிற்காக பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம)

## கால்...

திநிதித்துவத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

கடந்தமுறை தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்று சென்ற அங்கஜன் இராமநாதன் இம்முறை நேரடியாக சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்து நாடாளுமன்றம் செல்கிறார்.

யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கைச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட்டது. இதில் 49 ஆயிரத்து 373 வாக்குகளோடு மாவட்டத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்று ஆசனம் ஒன்றைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## பெரமுன...

ஒன்பவதாவது நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் இன்று அதிகாலை முழுமையாக வெளியாகின. சிறிலங்கா பொதுஜன பெரமுன 128 ஆசனங்களையும், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி 47 ஆசனங்களையும் கைப்பற்றின. மூன்றாவது இடத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 9 ஆசனங்களுடன் கைப்பற்றியது. சிறிலங்கா பொதுஜன பெரமுன தனித்து ஆட்சியமைக்கவுள்ளது. (ஒ.5)

## மத்திய...

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் வாக்களிப்பு முடிவுகளை அறிவிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இன்று அதிகாலை 1.30 மணியளவில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விருப்பு வாக்கில் சசிகலா இரண்டாம் இடத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், பின்னர் சுமந்திரன் இரண்டாம் இடத்தையும், சித்தார்த்தன் மூன்றாம் இடத்தையும் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் இன்று அதிகாலை 1.30 மணியளவில் சுமந்திரன், மத்திய கல்லூரிக்கு வருகை தந்தார். இதன்போது அவருக்கு எதிராக பெரும் கோசம் எழுப்பப்பட்டு, தாக்குதல் நடத்தவும் முயற்சிக்கப்பட்டது.

அவரது பாதுகாப்புக்கு வந்திருந்த சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து கோசம் எழுப்பியவர்களை தாக்கினர். இதனால் பெரும் களேபரம் மூண்டது. இதன்போது தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவின் மகன் கலையமுதனும் தாக்குதலுக்கு இலக்கானார். அந்த இடம் போர்க்களம் போன்று சிறிது நேரம் காட்சியளித்தது. சில நிமிடங்களின் பின்னர் சுமந்திரன் அங்கிருந்து வெளியேறினார். அதன் பின்னர் சுமுக நிலைமை ஏற்பட்டது. (ஒ.5)

# தொடர்ந்தும் கோலி முதலிடம்

டுபாய், ஓக.7

**ஒருநாள் போட்டி கிரிக்கெட் வீரர்களின் புதிய தரவரிசைப் பட்டியலில் இந்திய கப்டன் விராட்கோலி தொடர்ந்தும் முதலிடம் வகிக்கின்றார்.**



ஒருநாள் போட்டி கிரிக்கெட் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை ஐ.சி.சி. நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதன் படி துடுப்பாட்ட வீரர் தரவரிசையில் இந்திய கப்டன் விராட்கோலி (871 புள்ளி), துணைக் கப்டன் ரோகித் சர்மா (855 புள்ளி), பாகிஸ்தான் வீரர் பாபர் அசாம் (829 புள்ளி) ஆகியோர் மாற்றமின்றி முறையே முதல் 3 இடங்களில் தொடருகின்றனர். அயர்லாந்துக்கு எதிரான கடைசி ஆட்டத்தில் சதம் அடித்த இங்கிலாந்து கப்டன் இயான் மோர்கன் ஒரு இடம் முன்னேறி 22 ஆவது இடத்தையும், பேர்ஸ்டோ ஒரு இடம் ஏற்றம் கண்டு 13 ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் நியூசிலாந்து வீரர் டிரென்ட் பவுல்ட் (722 புள்ளி) முதலிடத்திலும், இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா (719 புள்ளி) 2 ஆவது இடத்திலும் நீடிக்கிறார்கள். அயர்லாந்துக்கு எதிரான தொடரில் 5 இலக்குகள் வீழ்த்திய இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் அடில் ரஷித் 4 இடங்கள் முன்னேறி 25 ஆவது இடத்தையும், 8 இலக்குகள் சாய்த்த வேகப்பந்து வீச்சாளர் டேவிட் வில்லி 6 இடங்கள் முன்னேறி 51 ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். 'ஓல்ரவுண்டர்கள்' தரவரிசையில் ஆப்கானிஸ்தான் வீரர் முகமது நபி முதலிடத்தில் தொடருகிறார். இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா 8 ஆவது இடத்தில் உள்ளார். (ரி2)

# ரசிகர்கள் இல்லாமல் போட்டிகளை நடத்துங்கள்

## *ரமீஸ் ராஜா வலியுறுத்து*

இஸ்லாமாபாத், ஓக.7

ரசிகர்கள் இல்லாமல் போட்டிகளை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முன்வரவேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான ரமீஸ் ராஜா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கிரிக்கெட் போட்டிகள் நடைபெறாமல் உள்ளன. உலக சுகாதார மையம் இந்த தொற்றிலிருந்து உலகம் விடுபட நீண்ட நாள்கள் ஆகும் எனவும் தெரிவித்துள்ளது.

இந்தச் சூழ்நிலை இப்படியே சென்றால், அனைத்து கிரிக்கெட் சபைகளும் நிதி நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் ரமீஸ் ராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரமீஸ் ராஜா தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக மனித வாழ்க்கை முடங்கியுள்ள நிலையில் கிரிக்கெட் ரசிகர்களும் தற்போது பசியால் கஷ்டப்படுகின்றனர். இது போன்று நீண்ட நாட்கள் நீடித்தால் கிரிக்கெட் சபைகள் தாக்குப்பிடிக்கும் என்று என்னால் நினைக்க முடியவில்லை.

கிரிக்கெட் போட்டிகள் எதுவும் இல்லாமல் அவர்களால் தொடர்ந்து சம்பளக் குறைப்பு செய்ய முடியாது. அப்படிச் செய்தால் அது பேரிழப்பை ஏற்படுத்தும்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையானது, ஏனைய கிரிக்கெட் சபைகளிடம் கிரிக்கெட் போட்டிகளை மீண்டும் எப்படி நடத்தலாம், குறைந்தபட்சம் ரசிகர்கள் இல்லாமல் போட்டியை நடத்த முடியுமா? என்பது குறித்து பேச வேண்டும். இந்தப் பேச்சுவார்த்தைக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முதல் அடியை எடுத்து வைக்கவேண்டும்.

எந்த கிரிக்கெட் சபையாக இருந்தாலும், அவர்கள் பணம் செழிப்பாக வைத்திருக்கிறார்கள். லொக் டவுன் நேரத்தில் சம்பளத்தைக் கொடுக்க முடியாது என்பது பெரிய விடயம் அல்ல. மீண்டும் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிப்பது குறித்து பேசுவது எமக்கு அவசியமானது. ரசிகர்கள் இல்லாமல் போட்டிகளை நடத்துவது என்றாலும், ஒரு வாய்ப்பாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்- என்றார். (ரி2)

# சச்சினை விடவும் ராகுல் சிறந்தவர்



புதுடில்லி, ஓக.7

சில நேரங்களில் சச்சினை விட ராகுல் டிராவிட் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று பாகிஸ்தான் முன்னாள் வீரர் ரமீஸ் ரஜா தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட்டின் கடவுள் என்று வர்ணிக்கப்படுபவர் சச்சின். அதேவேளை தடுப்புச்சுவர் என்று அழைக்கப்படுபவர் ராகுல் டிராவிட். இந்திய அணி தடுமாறும் போதெல்லாம் காப்பாற்றிய வரலாறு ராகுல் டிராவிட்டுக்கு உண்டு. இந்நிலையில் சில நேரங்களில் சச்சினைக் காட்டிலும் ராகுல் டிராவிட் சிறந்த துடுப்பாட்டவீரர் என்று ரமீஸ் ராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

ராகுல் டிராவிட் கடுமையான ஆடுகளத்தில் மிகச் சிறந்த துடுபாட்டவீரர். நங்கூரம் பாய்வது போன்று நின்று துடுப்பாட்டம் ஆடுகையில், சில நேரங்களில் சச்சினையும் விஞ்சிவிடுவார்.

இருந்தாலும், சச்சினைப் போன்று இயற்கையாகவே ராகுல் டிராவிட்டுக்கு திறமை கிடையாது. ஆனால், அர்ப்பணிப்பு, தீர்மானித் தல், வலு ஆகியவற்றின் மூலம் சிறந்த வீரராக ஆக அவரால் முடிந்தது - என்றார். (ரி2)

# மஞ்சுரேக்கருக்கு மன்னிப்பு இல்லை?

புதுடில்லி, ஓக.7

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், பின்னர் தொலைக்காட்சி வர்ணனையாளராகவும் இருந்த சஞ்சய் மஞ்சுரேக்கர் தாம் தெரிவித்த கருத்துக்களுக்கு மன்னிப்புக் கேட்கத் தயார் என்று இந்தியக் கிரிக்கெட் சபைக்கும், அதன் தலைவர் கங்குலிக்கும் கடிதம் அனுப்பியிருந்தபோதிலும், எதிர்வரும் ஐ.பி.எல். தொடருக்கான வர்ணையாளர் குழுவில் அவர் உள்ளடக்கப்படவில்லை. ஏனைய வர்ணனையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், மஞ்சுரேக்கருக்கு அழைப்பெதுவும் விடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக மும்பை மிரர் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்திய கிரிக்கெட் சபையிடம் இருந்து சுனில் கவாஸ்கர், எல்.சிவராமகிருஷ்ணன், முரளி கார்த்திக், ஹர்ஷா போக்ளே ஆகியோருக்கு அழைப்புக் கடிதம் சென்றுள்ளது. ஆனால் சஞ்சய் மஞ்சுரேக்கருக்கு அழைப்பில்லை. ஏனைய வெளிநாட்டு வர்ணனையாளர்களுக்கும் அழைப்புக் கடிதம் சென்றுள்ளது என்று தெரிகின்றது.

இந்திய அணி தென்னாபிரிக்காவுடன் கடந்த மார்ச் மாதம் ஆடிய தொடர், அதாவது கொரோனாத் தொற்றால் கைவிடப்பட்ட தொடருக்குக் கூட மஞ்சுரேக்கர் வர்ணனைக் குழுவில் இடம்பெறவில்லை. அதன்பின்னர் தான் அவர் சமீபத்தில் இந்திய கிரிக்கெட் சபைக்குக் கடிதம் எழுதித் தாம் தெரிவித்த கருத்தால் எவராவது மனப்புழுக்கத்துக்கு ஆளாகியிருப்பின் அதற்காக மன்னிப்புக் கேட்கத் தாம் தயார் என்று கூறியிருந்தார்.

அதேவேளை உயர் நீதிமன்றம் நியமனம் செய்த கிரிக்கெட் நிர்வாகக் குழுவில் இருக்கும் ராமச்சந்திர குஹா, இந்திய கிரிக்கெட் அணியில் ஒரு "சூப்பர் ஸ்டார்" கலாசாரம் ஊடுருவியுள்ளது என்றும், அணித் தலைவருக்கு அதிகாரம் அதிகமாக அளிக்கப்பட்டு அவரே வர்ணனையாளரையும் தேர்வு செய்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றார் என்றும் குற்றம்சாட்டியிருந்தார்.

இப்போது கங்குலி நினைத்தால் தான் மஞ்சுரேக்கர் வர்ணனைக்கு வரமுடியும். ஸ்டார் வீரர்கள், அவர்களது வணிக முக்கியத்துவம், ஸ்பொன்ஸர் நலம் என்று கிரிக்கெட்டை வணிகம் பிடித்து ஆட்டுகிறது. ரெய்னாவும் இதை அண்மையில் சுட்டிக்காட்டியுள்ளார்- என்றுள்ளது. (ரி2)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை எம் ஊடாக நடைபெறுகின்றன. மிக குறைந்த கட்டணத்தில் வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 0777554528, 0212227835

பகுதிநேர உடனடி வேலைவாய்ப்பு
பல்கலைக்கழக மாணவர்கள், வயது வந்தோர், வேலை தேடிக்கொண்டிருப்போர் அனைவர்க்கும் ஓர் அரியவாய்ப்பு. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வசிப்போர் விண்ணப்பிக்கலாம். தகுதியுடையோர்
அனுப்ப வேண்டிய முகவரி:- 134, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
Mail:- npJobs9@gmail.com



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.